விலை ரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 12 றவி அவ் 28 இதழ் 43
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25.1.82

# தமிழர் கலை, கலாசாரத்தில் அரசுக்கு அக்கறை இல்லை!

## 'யோகேஸ்' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''நாட்டுமக்களின் கலை, கலாசாரத்தைவளர்க்க பெரும் தொகையான பணத்தைச் செலவு செய்யும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் கலை, கலாசாரத்தை வளர்ப்பதில் எதுவித அக்கறையும் இதுவரை செலுத்த வில்லை; செலுத்தவும் மாட்டாது'' என்று யாழ். எம். பி. திரு. வெ, யோகேஸ்வரன், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு பரத நாட்டிய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பகுகையில் கண்டனம் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற செல்வி விஜயகுமாரி பரமேஸ்வரனின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் திரு. வெ, யோகேஸ்வரன் தொடர்ந்து

(8-ம் பக்கம் பார்க்க)

★ பொலிஸ் - இராணுவ ஒத்துழைப்புடன்

# யாழ். கிராமங்கள்தோறும் கண்காணிப்புக் குழுக்கள்!

(ஏ. வி. மாணிக்கம்)

**யாழ். மாவட்டக் கிராமங்கள் தோறும் இராணுவம்-பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இது சம்பந்தமாக கிராமசேவை அலுவலர்களின் ஆலோசனையை யாழ். அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.**

யாழ். செயலகத்தில் நடைபெற்ற கிராமசேவை அலுவலர்கள் மகாநாட்டில், திரு, கே.தேவநேசன் நேசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி தகவலை வெளியிட்டார். இம்மகாநாட்டில் யாழ். செயலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர். யாழ். மாவட்டக் கிராம சேவை அலுவலர்கள் சங்கத் தலைவர் திரு, கே. எஸ். சோமசுந்தரம் தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது.

**கண்காணிப்புக் குழுக்கள்**

''யாழ். மாவட்டத்திலுள்ள கிராமங்கள் தோறும் கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதால் இதற்கான ஆலோசனைகளை நீங்கள் வழங்கவேண்டும்'' என்று திரு, தேவநேசன் நேசையா வேண்டுகோள் விடுத்தார்.

''கிராம மட்டத்தில் மக்கள் ஒற்றுமையாக இருந்தால் அதன்மூலம் மாவட்ட மக்களும் ஒற்றுமைப்பட்டு இந்த நாட்டுமக்கள் தேசியஒற்றுமையுடன் வாழ்வார்கள்'' என்று குறிப்பிட்ட அரசாங்க அதிபர், இதற்குக் கிராம சேவை அலுவலர் வழியமைக்கவேண்டும என்று கேட்டுக்கொண்டாரர்.

கிராமங்கள தோறும் கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பதற்கான ஆலோசனைகள இராணுவம், பொலிசாரிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும் இதை நடைமுறைப்படுத்துவதற்குக் கிராமசேவை அலுவலர்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை என்றும் அவர் கூறினர்.

யாழ், மாவட்டத்திலுள்ள கிராம சேவை அலுவலாகளுக்கான இடமாற்றம் பொதுவானதாக அமைக்கப்படவில்லை என்று குறிப்பிட்ட திரு, தேவநேசன் நேசையா கஷ்டமான பிரதேசங்களில் கடமையாற்றியவர்களுக்கான இடமாற்றமும், ஒழுங்கு நடவடிக்கைமூலம் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றமும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொதுவான இடமாற்றங்கள் தகுந்த ஆலோசனையின் பின்னர்தான் மேற்கொள்ளப்படும் என்றும் அரச அதிபர் கூறினர்.

பாணந்துறை அருகில்

# படகு விபத்து: 8 பேர் பலி?

(கொழும்பு)

பாணந்துறையில் நேற்று மூன்தினமிரவு நிகழ்ந்த படகு விபத்தில், எட்டுப் பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறைக்கு அருகில் நங்கூரமிட்டிருந்த ஒரு கப்பலுக்கு, படகொன்றில் மரக்கறி ஏற்றிச்சென்ற படகு தான் விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகு மூழ்கியதால் படகில் சென்ற எட்டுப் பேரும் பலியாகியிருக்கலாம என்று அஞ்சப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட

# அபி. சபைக் கூட்டத்தில் 'இராசு' கலந்துகொள்வார்

(நமது நிருபர் இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபை இன்று கூடும்போது, பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை கலந்து கொள்வார்.

கடைசியாக நடைபெற்ற அபிவிருத்திசபைக் கூட்டத்தில், அமைச்சர் திரு. செ. இராசதுரையின் அங்கத்துவம் தலைவரினுல் பறிக்கப்பட்ட போதிலும், சட்ட மா அதிபர் திரு. சிவா பசுபதி மாவட்ட அபிவிருத்திசபைச் செயலாளருக்கு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அமைச்சர் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்கின்ருர்.

சபையில், பதவி சால் அங்கத்துவம் பெற்ற திரு. இராசதுரை செப்டம்பர் மாதம் 21ம் திகதிக்குப் பின்னர் நடைபெற்ற அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதக் கூட்கிங்களுக்குத் தொடர்ந்து செல்லாததை அடுத்து இவரின் பதவி இழப்பு குறித்து சட்ட மா அதிபருக்கு அறிவிப்பதாக கடந்த 28ம் திகதி கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டது.

ஆனுலும் உறுப்பினர் ஒருவர் தாம் சமூகமளிக்கத் தவறிய தினத்திலிருந்தே மூன்று மாதம் கணிக்கப்படுவதால் இதன் அடிப்படையில் அமைச்சர் இராசதுரை பதவியை இழக்கவில்லை என்று சட்ட மா அதிபர் முடிவு செய்துள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க இன்றைய கூட்டத்திற்குச் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அமைச்சர் இராசதுரை பதவி இழந்துவிட்டதாகக் கருதப்பட்டுத் தலைவர் அழைப்பு அனுப்பவில்லை. இருப்பினும் சபையின் தீர்மானப்படி மாதாந்தக் கூட்டம் கடைசித் திங்கட்கிழமை நடைபெறும் என்பதற்கிணங்க அமைச்சர் இராசதுரை கலந்து கொள்வார். இவரின் அங்கத்துவம் பறிக்கப்படவில்லை என்பதைச் செயலாளர் திரு.எம். அந்தோனிமுத்து சபையில் இன்று அறிவிப்பார்.

புன்னைக்குடா மீனவர் வீடமைப்புத் திட்டம் தொடர்பான பத்திரிகையில் வெளிவந்த அறிக்கைகள் தொடர்பாகவும் மட்டக்களப்பு 2-வது எம்.பி.ஜனுப் பரீத் மீராலெப்பை உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், பட்டிருப்பு எம். பி.திரு.பூ. கணேசலிங்கம் ஆகியோர் இன்றைய கூட்டத்தில் காரசாரமாகப் பேசுவார்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

நாளை ஆரம்பமாகும்

# உண்ணுவிரதம்!

(யாழ்ப்பாணம்)

1980 ஜூலை மாதம் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தில பங்கு கொண்டதன் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழக்குமாறு கோரி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம உண்ணுவிரதப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி [illegible] தொழிற் சங்க சம்மேளன அலுவலகத்தில் உண்ணுவிரதப் போராட்டம் தொடர்ந்து [illegible] ட்களுக்கு நடைபெறும்.

பல இயக்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இப்போராட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ''தாய்மொழிக் கல்விக்கு முற்றுப்புள்ளி!

## கல்வி வெள்ளை அறிக்கைபற்றி கல்லூரி அதிபர் கவலை

(யாழ்ப்பாணம்)

'இதுவரைகாலமும் கட்டாய பாடமாக இருந்துவந்த தாய்மொழிக் கல்விக்கு கல்வி வெள்ளை அறிக்கையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதால் குறிப்பாக தமிழ் மாணவர்கள் எதிர்காலத்தில் பாதிக்கப்படுவார்கள்'' என்று யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் திரு. எஸ். ஆனந்தராஜன் ஈழ மாணவர் பொதுமன்றத்தினுல் கல்வி வெள்ளை அறிக்கையை எதிர்த்து யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கவலை தெரிவித்தார்.

மன்றத்தலைவர் திரு. எம். டேவிட்சன் தலைமையில் நேற்றுக்காலை இக்கூட்டம் நடைபெற்றது.

மண்டபத்தில் மாணவ, மாணவிகள் பல நூற்றுக்கணக்கில் குழுமியிருந்தனர்.

திரு. ஆனந்தராஜன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''கல்வி வெள்ளை அறிக்கையில், முதல்மொழியிலே [illegible] கல்வி கற்பிக்கப்படவேண் [illegible] என்று குறிப்பிடப்பட் [illegible] ளது. இது, சிங்கள மொ [illegible] யைப்படிப்பதற்கு [illegible] பளிக்கப்படுவதுடன், [illegible] யப்படுத்துவதற்கும் வழிவகு [illegible] க்கும் கொத்தணிப் [illegible] சாலை முறை நாட்டி [illegible] பாரதூரமான மாற்றங்க [illegible] ஏற்படுத்துவதுடன், தமிழ் மக்களுக்கு பாதகமாக அ [illegible] யும்.

சில கல்லூரி அதிபர்க [illegible] தங்களது கல்லூரிகளில் எ [illegible] நடக்கிறது என்பதே [illegible] யாத நிலையில்; கொத்த [illegible] முறையில் வேறு பாட [illegible] களுக்கும் அந்த அதிபர்க [illegible] தலைமை தாங்கமுடியும [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமை யாரறிவார்
இந்த அகலமும் நீளமும் பேரறியாத பெருஞ்சுடர்
ஒன்றதின் வேரறியாமை விளம்புகின்றேன்.

— திருமந்திரம்

# நமது நோக்கு

## ஐரோப்பிய விவகாரங்கள் வேறுபாட்டின்வியாக்கியானம்

முதலாவது உலகமகா யுத்தத்தைத் தொடக்கி உலக நாடுகளை நடுங்க வைத்த ஜெர்மனியைத் தலையெடுக்காமல் ஒதுக்கி வைப்பதற்காக உண்டானதே 1919ம் வேர்செயில்ஸ் ஒப்பந்தம்.

இதன் அநீதியை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று எழுந்ததே ஹிட்லரின் 1939ம் ஆண்டு இரண்டாவது உலக யுத்தம், அதன் விளைவு; ஆறு வருடம் நடந்த யுத்தம் உலகத்தை அழித்துவிடுமோ வென்று அஞ்சுமளவிற்குத் தொடர்ந்தது; அது மட்டுமல்ல இன்றும் உலகம் கெடுபிடி யுத்தத்திலிருந்து தப்பிவாழ முடியவில்லை.

1945ல் யோல்ட்டா (Yalta) ஒப்பந்தத்தில்கைச் சாத்திட்ட மும்மூர்த்திகள் சேர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின்—ஐரோப்பாவையும்,—அகில உலகையுமே, அமெரிக்க சோவியத் ரஷ்ய ஆதிக்கத்துக்கு பகிர்ந்துவிட்டனர்.

அன்று தோல்வியால்தலை கவிழ்ந்த பிரான்ஸ் தலை நிமிர்ந்த காலத்தில், டிகால் ஆட்சியின் உறுதிபெற்ற செல்வாக்கில், இந்த 'அநியாய, யோல்ட்டா ஒப்பந்தத்தையிட்டு கவலைகொண்டிருந்தது.

இன்று பிரான்ஸ் சோஷலிச ஆட்சியில் இதனை எவ்வாறு கணிக்கின்றது? போலந்து நெருக்கடி உடனடிக் காரணம்!

பிரெஞ்சு சோஷலிச ஜனாதிபதி மிற்றரான்ட் 37 வருடத்துக்கு முன் எழுதப்பட்ட ஒப்பந்தம் அன்று தவிர்க்க முடியாததொன்றென்கின்றார்; ஜெர்மனியின் இராணுவ அக்கிரமத்தையும், நீண்டகால யுத்தத்தையும் நீக்குவதற்கு வேறு வழி இருந்திருக்கவில்லையென்பது அவருடைய கருத்து; இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் இன்றைய கேடுகளை நீக்க ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் ஒன்றுபட வேண்டுமென்று சொல்கின்றார். அது ஐரோப்பிய பாதுகாப்புக்கு அவசியம் என்கின்றார்.

இந்த ஐரோப்பிய — அமெரிக்க ஒற்றுமை யாருக்கு எதிராக? போலந்து பிரச்னைக்கு மூலகாரணமானதென்று கருதப்படும் சோவியத் ரஷ்யாவுக்கு எதிரானதென்பது தெளிவு; ஆயினும் அது இலகுவானதல்லவென்பது விளக்கத்துக்குரியது.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் போலந்து விவகாரத்தில் எதிர்ப்புத் தெரிவித்தவுடன் படுத்துவிட்டன! 'போர்க்கொடி ஏந்தத் தயாராகிறேன்' என்கிற அமெரிக்க ஜனாதிபதி ரஷ்யாவுடன் மிண்டுவதற்குத் தயங்குகிறார். அமெரிக்க காங்கிரஸ், ரஷ்யாவை பொருளாதார ரீதியில் தண்டிப்பதால் அமெரிக்க வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படுமென அஞ்சுகின்றது.

மீண்டும் ஐரோப்பாவை நோக்கினால் மேற்கு ஜெர்மன் அதிபர் (ஸ்)சிமிட் அமெரிக்க ஜனாதிபதியின் போர்க்குரலுக்கு சிறிதளவும் ஆதரிப்பு நல்கும்மனப்பாங்கற்றவராகவிருக்கின்றார். ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க இராணுவ படையாலே உண்மையில் ஆபத்தென்று கருதுகின்றார், அமெரிக்க — ரஷ்ய ஆயுத பரிகரணம் அவசியமென்று அதனைநடைமுறைப்படுத்த அரும்பாடுபடுகின்றார்.

எவ்வகையிலும் அமெரிக்க — ரஷ்ய ஆதிக்கப் போட்டி ஐரோப்பாவை அழித்துவிடுமென்ற அபிப்பிராயம் பொதுவானது; இதில் நாம் கவனிக்கக் கூடிய விபரீத நிலை ஒன்று உண்டு. அது என்ன?

சோவியத் கம்யூனிச ஆதிக்கத்தை எதிர்ப்பதில் அமெரிக்க ஜனாதிபதியிலும் பார்க்க தீவிரமானவர் சோஷலிச ஜனாதிபதி மிற்றெரான்ட். அவருடைய தர்க்க ரீதியான கருத்து அவதானத்துக்குரியது,

யோல்ட்டா ஒப்பந்தம் மேற்கு — கிழக்கு என்று ஐரோப்பிய நாடுகளின் எல்லையைப் பிரித்ததொழிய அந்தநாடுகள்என்றென்றும் அமெரிக்க அல்லது ரஷ்ய ஆட்சிக் கொள்கைகளை அப்படியே பின்பற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தைக் கொண்டதல்லவென்பது அவருடைய வாதம்.

கிழக்கு ஐரோப்பா கம்யூனிஸ்ட் கொள்கையை ஆதரிக்க வேண்டியிருப்பினும், அது ரஷ்யாவின் கொள்கையாகவிருக்க வேண்டியதில்லை; போலந்து விடயம், போலந்து மக்களைப் பொறுத்தது என்பது நியாயமானது.

இவ்வித அரசியல் சித்தாந்த வேறுபாட்டைவிளக்கும் பிரெஞ்சு சோஷலிச ஜனாதிபதியின் கருத்தில் நாம் கவனிக்கக்கூடியதென்ன?

சோஷலிச வாதி மிற்றெரான்ட் சுதந்திரத்திற்கும் சோவியத் கம்யூனிசத்துக்கும் ஒற்றுமை கிடையாதென்றும் சோவியத் கம்யூனிசத்தின் இன்றையபோக்கில் அது உலக ஆதிக்கத்தில் ஆசைகொண்டிருக்கிறதுமென்கிறார்.

முதலாளித்துவ அமெரிக்கா சோவியத் ரஷ்யாவை ஜென்ம விரோதியென்று கொள்வதில் அதிசயமில்லை; ஆனால் சோஷலிச பிரான்சு ஜனாதிபதி சோவியத் கம்யூனிஷம் சுதந்திர வாழ்க்கைக்கு எதிரானதென்று கொள்வது கம்யூனிசம், சோஷலிசம் என்ற முற்போக்கான பொதுவுடைமைக் கொள்கைகளில் எத்தனை வடிகளிருக்கின்றதென்பதை விளக்குகிறது,

அப்கானிஸ்தானில், கம்பூச்சியாவில் ஆபிரிக்க நாடுகளில் சோவியத் தலையீடு, இவ்வித சந்தேகமான நோக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

உலகளாவிய நோக்கில் இவ்வித அரசியல் ஆதிக்கப் போட்டி அர்த்தமானதா? என்ற கேள்வி முதலிடம் பெறுகிறது.

பொருளாதார மாற்றங்கள்—எண்ணை எரிபொருள்; உணவுப் பொருட்கள்; ஆயுத தளபாடம் போன்ற பல தேவைகள் — உலகில் எந்த நாடும் தனித்தியங்கவோ மற்ற எந்த நாட்டின் உதவியின்றி உயிர் வாழவோ முடியாத நிலையில் பின்னிப் பிணைந்திருக்க உருவெடுக்கின்றன.

உலக யுத்தத்திற்கு இதுதான் இன்றைய பாதுகாப்பு.

---

★ இன்று சீனப் புதுவருடம் ★

# வசந்த விழாவாக மக்கள் கொண்டாடுகின்றனர்

ஜனவரி 25ந் திகதியை அதாவது இன்றைய தினத்தை சீனமக்கள் வசந்தகால விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

ஜனவரி மாத ஆரம்பத்திலேயே அவர்களது புதுவருடவிழாவான இவ்வசந்தகால விழா நெருங்குவதைக் குறிக்கும் வகையில் புதுவருடத்தைச் சித்தரிக்கும் படங்களும் பட்டாசு வெடிகளும் பெருமளவில் சீனநகர்களில் விற்பனையாகின்றன.

ஒரு வருடம் கடுமையாக உழைத்த பின்னர் புது வருடத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவவும் சீனரது முன்னோர் நம்பியவாறு துர்த்தேவதைகளை துரத்தியடிக்கவும் பட்டாசு வெடிகளைக் கொளுத்தி சீனர்கள் இந்நாளில் குதூகலிக்கின்றனர்.

இவ்வசந்த கால விழாவினை லூனர் புதுவருடமென்றும் [சீ]னர்கள் அழைப்பர் இதை [மு]ன்னிட்டு பெரும் விடுமுறை[யு]ம் சீனவில் வழங்கப்படுகி[ற]து. அன்றும் இன்றும் பெரு[ம]ளவு சீனமக்கள் விவசாயிகளாகவே இருக்கின்றனர். எனவே இப்புதுவருடம் புதிய உற்பத்திப்பருவத்தையே குறித்து நிற்பதாக அவர்கள் கொள்ளுகின்றனர். பண்டைய சீனவில் அறுவடை, புதுவருடம் ஆகிய இரு சொற்களும் ஒரே விளக்கத்தையே தந்து நின்றன,

சீன லூனர் கலண்டரில் மேற்கிந்திந்தியககலண்டரிலிருந்தும் ஒருமாதம் பிந்தியே வருகின்றது. எனவே இம் மாதம் சீனக்கலண்டர் படி வருட இறுதி மாதமாகும்.

சீனவருடங்கள் யாவும் அவர்களது சம்பிரதாயப்படி மிருகங்களின் பெயர்கொண்டே அழைக்கப்படுகின்றன இன்று ஆரம்பமாகும் சீனப்புதுவருடம் நாயினுடையதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பழைய சம்பிரதாயங்களைப் பின்பற்றி இன்றும் சீன மக்கள் அரிசிக்கஞ்சி நிலக்கடலை பேரிச்சம்பழம் போன்றவற்றை இவ்வசந்த கால விழாவின் போது உண்டுகளிக்கின்றனர். இவ்வாறு இவற்றை உண்ணுவது சகல உணவுப் பயிர்களினதும் அபரித விளைவைக் குறிக்கின்றதென விளக்கப்படுகின்றது.

பண்டைய காலத்தில் வருட இறுதி மாதத்தில் வரும் 23 வது தினத்தில் அதாவது வருடப்பிறப்புக்கு மூன்று தினங்களுக்கு முன்பு சமையலறைத்தேவதை சொர்க்கத்திலுள்ள சனது எசமானிடம் கடந்த வருடத்தில் மக்கள் என்ன செய்தார்கள் என்பதைத் தெரிவிக்கச் செல்லுமென்றும் இத்தேவதையை மகிழ்வித்து சாந்தப்படுத்த மக்கள் இனிப்புப் பண்டங்களையே படைத்தனரென்றும் கூறப்படுகின்றது இத்தகைய வழிபாட்டுமுறை தற்காலத்தில் நிலவா விடினும் மக்கள் இனிப்புப்பதார்த்தங்களை இத்தினங்களில் அதிகளவில் உட்கொள்கின்றனர்.

பிறக்கப்போகும் புது வருடத்தை வரவேற்க இரவு வெகுநேரம் சீனக்குடும்பங்கள் விளித்திருக்கும் புதுவருடத்தின் முதல் மூன்று நாட்களிலும் உறவினர்களையும் நண்பர்களையும் சந்தித்து விருந்தோம்பி சீனர்கள் மகிழ்வார்கள்.

லூனர் புதுவருடத்தின் 15 வது தினத்தில் தீபாலங்கார விழா நடைபெறும். இவ்விழாவில் தீபககூடுகள் ஏற்றும் போட்டியும் நடாத்தப்படுகிறது. பண்டைய காலம் தொட்டு இத்தீபமேற்றும் போட்டி நிலவி வருவதால் பீஜிங் என்ற சீனநகரத்தின் வீதியொன்று 'தீபநர்வீதி' என அழைக்கப்படுகின்றது.

நாட்டிய நாடகங்களும் புதுவருடக் கொண்டாட்டத்தையிட்டு அங்குள்ள அரங்குகளில் நடாத்தப்படுகினறன இவற்றில் வேதாளநடனம் சிங்கநடனம் போன்ற சீன நடனங்கள் பிரபல்யம் பெற்றனவாக விளங்குகின்றன.

சீனர்கள் கொண்டாடும் இவ்வசந்தகால விழா வசந்த காலம் நிறைவு பெறுவதையும் புதிய விவசாயப் பருவம் ஆரம்பமாவதையும் உணர்த்தி புத்துணர்வை அவர்களுக்கு வழங்குகின்றது.

பா-அனந்தகிருஷ்ணன்

---

# மக்கள் கருத்து

### வேலிகள் நடக்கும் அதிசயத்தைத் தடை செய்க

யோகபுரத்தில் வேலிகள் நடக்க ஆரம்பித்துள்ளன.

வவுனிக்குளத் திட்டத்திலே காணிகளையும் பாதைகளையும் வகுத்து மக்களைக் குடியேற்றியது அரசாங்கம். பாதைகள் எதிர்காலத்திலே அபிவிருத்தி செய்யப்படவேண்டும்; பாதை திருத்தத்துக்கு வேண்டிய மண்ணை வெட்டியெடுக்க வேண்டும்; வடிகால்கள் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தினாற்போலும் பாதைகளுக்கு வேண்டிய அகலமான இடம் விடப்பட்டிருந்தது. ஆனால் யோகபுரம் 5ம் யூனிற்றில் மல்லாவி அரசினர் பாடசாலைக் கருகிலே கிழக்குப் புறமாகத் தெற்கு நோக்கிச் செல்லும் வீதியின் கிழக்குப் புறமாக உள்ள குடியிருப்புக் காணிகளின் முள்வேலிகள் தெருவை நோக்கி நடக்கத்தொடங்கியிருக்கின்றன. காணியிற் குடியிருப்பவர்கள் தெருவுக்குரிய நிலத்திலே புதிய எல்லை வேலிகளை முதலில் அமைக்கின்றார்கள். அதன் பின்னர் உள்ளே இருக்கும் பழைய வேலிகளை அகற்றிவிடுகின்றார்கள். பாதையின் அகலம் மெல்ல மெல்லச் சுருங்குகின்றது. இப்படியான அடாத்தான வேலைகள் பட்டப்பகலிலே பகிரங்கமாக நடக்கின்றன. இதைக் கேட்பதற்கு ஒரு திணைக்களமோ, அதிகாரிகளோ இல்லை என்று இக்காணிக்காரர்கள் நினைத்துவிட்டார்களோ என்றே எண்ணத் தோன்றுகிறது. மேற்படி வீதியிலே மாங்குளம்—துணுக்காய் பிரதான வீதியோரத்திலிருந்து அடுத்துள்ள சில காணிகளின் வேலிகள் இப்படி நகர்த்தப்பட்டிருக்கின்றன.

இச்செயல் உடனே தடுத்து நிறுத்தப்படாவிட்டால் இந்த நோய் எல்லா வேலிகளுக்கும் பரவிவிடும்; அதனுடன் எல்லைகளுக்கு எல்லையில்லாத நிலை வந்துவிடும். வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சலான ஒரு காலமும் வரலாம் ஆதலால் தெற்குரிய அதிகாரிளும் திணைக்களங்களும் இதிலே உடனடியாகக் கவனமெடுக்க வேண்டும்.

குடியேற்றத்திட்டத்திலுள்ள பாதைகளுக்கு உரிமை கொண்டாடும் திணைக்களம் எதுவென்று தெரியாதிருக்கும் போது, இப்பாதைகளின் அபிவிருத்திக்கு வேலைகள் ஒன்றும் நடவாதிருக்கும் போது இவ்விஷயத்தைக் கவனிக்க யார் வரப்போகின்றார்கள் என்று மக்கள் எண்ணுகின்றனர்.

ஒரு விவசாயி.
யோகபுரம்.

---

இன்று நினைவுதினம்

## சுன்னாகம் தந்தபுலவர் ஏறு

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலே நடமாடும் பல்கலைக்கழகமாக மிகப் பிரசித்தி பெற்று விளங்கிய சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் தமது 23 வயதிலேயே (1878 ல்)பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் ஏழாலையில் ஆசிரியராக அமர்த்தப்பட்டார், வகுப்பும் துரித வளர்ச்சி கண்டது.

இப்புலவரேறு—இளம் சிங்கமாக விளங்கிய காலத்திலே அங்கு சீரிய முறையில் கற்பித்தமையால்—எத்தனையோ வித்துவ சிங்கங்கள் தோன்றினார்கள். இவர்கள் பலர் மகா விவேகிகளாக' பல புராதன நூல்களையும் உரைகளையும் ஆராய்ந்து அவற்றிலேயே உள்ள பிழைகளைக் கண்டு திருத்தி அச்சிட்டனர். இவர்களில் தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையர், யாழ்ப்பாணம் அரச சண்முகம் ஐயர் ஆகியவர்கள் பிரசித்தமானவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், பொதுவாகப் பாராட்டு வழங்குவது குறைவு. ஏழாலையில் நடைபெற்ற இந்த வகுப்பைப்

ஆசிரியமணி

**ஆர். ரி. சுப்பிரமணியம்**

பற்றி அதன் தாபகர் சி. வை. தாமோதரம்பிள்ளை மூலம் கேள்விப்பட்ட நாவலர் அவர்கள், 1879 ல் அவ்விடம்போய் மாணவர்களைப் பரீட்சித்து, மனம்பூரித்து, புலவர் அவர்களைப் பாராட்டி பரீட்சைக் குறிப்பும் வழங்கியிருக்கிறார்' இந்நிகழ்ச்சி அக்காலத்தில் பிரசித்தமாகிவிட்டது.

வண்ணை — நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் புலவர் அவர்கள் 1902 ல் தலைமைப்புலவராக நியமனபெற்றார். சங்கர பண்டிதரின் குமாரர் சிவப்பிரகாச பண்டிதர், வடலியடைப்பு அருணசல சாஸ்திரிகள் ஆகியோர் உடனாசிரியர்களாகக் கற்பித்தனர். இவர்கள் சமஸ்கிருதத்திலும்

(7ம் பக்கம் பார்க்க)

"கூட்டுச்சேரா இயக்கத்தின்

# அடிப்படைக் கொள்கைகளைச் சரியாக கடைப்பிடிக்கவேண்டும்"

## செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் இந்திரா

புதுடில்லி, ஜன. 25

''யுத்தத்தை தடுக்க முடியும். நமது அணு சகாப்தத்தில் யுத்தம் தடுக்கப்படல் வேண்டும், சமாதானம் வெல்லற்கரியதாக்கப்படல் வேண்டும். இந்த இலட்சியத்துக்காக நாம் நமது முழுப் பலத்துடன் உழைக்க வேண்டும்'' என்று இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி இங்கு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்,

மிகப்பெரிய அணுவாயுதங்களைக் கொண்ட நாடுகளை சம்பந்தப்படுத்தும் யுத்தம் நாகரீகத்தின் அழிவைத்தான் குறிக்கும் என்று தெரிவித்த அவர் ''ஐரோப்பிய தலைவர்களும் மக்களும் எதார்த்த நிலமைகளைப் புரிந்து கொண்டுள்ளதையும் முரண்பாடுகள் மோதல்களைத் தவிர்க்க ஆர்வம் கொண்டுள்ளதையும் எனது ஐரோப்பிய விஜயத்தின் போது அவதானிக்க முடிந்தது. ஐரோப்பாவிலும் ஆசியாவின் சில பகுதிகளிலும் யுத்தத்தின் பாதிப்புகள் பற்றிய நினைவுகள் இன்றும் பசுமையாகவுள்ளன.

ஜப்பானிய மக்கள் அணுவாயுதங்களின் விளைவுகளை இன்னமும் மறக்கவில்லை. இந்தியர்களான நாம் சமாதானத்தை விரும்புகிறோம். ஏனெனில் அதுதான் எமது அபிவிருத்திக்கான கனவுகளை நனவாக்கும் ஒரேயொரு நிலைபாடு என்றும் கூறினர்.

''இந்து சமுத்திரத்தை சமாதானமண்டலமாக்கும் ஐ. நா. பிரகடனம் செயல்படுத்துவதற்காக சர்வதேச மகாநாடு கூட்டப்படுவதை இந்தியா ஆதரிக்கிறது. ஆயினும் சில நாடுகள் எடுத்துள்ள நிலைபாடுகளினுல் அது விரைவில் கூட்டப்படுவதற்கான சாத்தியப்பாடுகளைக் காண முடியவில்லை. இதற்கு தென்மேற்கு ஆசியாவின் நிலைமைகள் காரணம் காட்டப்படுவது சரியல்ல. விரைவில் இந்த விவகாரங்கள் தீர்க்கப்பட்டு விடும் என நாம் நம்புகிறோம்'' என்றும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

''கூட்டுச்சேரா இயக்கம் உலக அரசியலில் கொண்டுள்ள பாத்திரம் பற்றிக் கூறுகையில், ''இந்தக் கூட்டுச்சேரா இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை, கூட்டுச்சேரா நாடுகள் சரியாகக் கடைப்பிடித்தால் சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்க்க உதவியாக இருக்கும்'' என்று நம்பிக்கை வெளியிட்டார்.

3 மூன்று சில்லு சைக்கிள்

# சென்னை ரேட்டரிக் கழகம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, பரந்தன் ரேட்டறிக் கழகம் அங்கவீனர்களுக்கான மூன்றுசில்லு சைக்கிள்களை, கிளிநொச்சிக் குருகுலம், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி கருணைநிலையம் ஆகிய மூன்று இடங்களுக்கும் வழங்கவுள்ளது.

இந்த சைக்கிள்களை யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திசபை செயலாளருமான திரு தேவநேசன் நேசையா இன்று திங்கட்கிழமை கையளிப்பார்.


இம் மூன்று சைக்கிள்களும் சென்னை ரேட்டறிகழகத்தால் கிளிநொச்சி, பரந்தன் ரேட்டறிக்கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### சமய விருத்திச்சங்க மகளிர் கிளை

(யாழ்பபாணம்)

மானிப்பாய் கோவில்பற்று இந்துசமய விருத்திச்சங்கத்தின் அங்கமாகிய நவாலி இந்துசமய விருத்திச்சங்கத்தின் மகளிர் கிளை நவாலி மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது,

இக் கூட்டத்தில் வைத்திய கலாநிதி திருமதி சரவணபவானந்தன் தலைவியாகவும் திருமதி க, கனகரத்தினம் செயலாளராகவும், திருமதி த. ஜெயரத்தினம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (க)



சிறீ சுப்பிரமுனிய சுவாமிகள் சிஷ்யர்களுடன் கந்தர் மடத்திலுள்ள 'வள்ளுவர்' பணிமனைக்கு வருகைதந்த போது மன்றத் தலைவர் திரு, ஏ. என். யோகநாதன் மாலையிட்டு வரவேற்பதையும் அருகில் டாக்டர் பற்றிக் அந்தோனிப்பிள்ளை நிற்பதையும் காணலாம்.

# கடற்றொழில் அபிவிருத்திக்கு புதிய சமாஜம்

(பண்டத்தரிப்பு)

மாவட்ட ரீதியிலான கடற்றொழில் அமைப்பு மூலம் கடற்றொழிலை விரிந்த அடிப்படையில் அபிவிருத்தி செய்து கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு கிளைச் சங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைளுக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கும் பொருட்டு யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கங்களின் சமாஜம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிபர் திரு. ஏ. பிலிப் தலைமையில் யாழ். கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி சமாஜஅங்குரார்ப்பணகூட்டத்தில்சமாஜ நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; ஏ. பிலிப் உபதலைவர்; வ. வைத்திலிங்கம் செயலாளர்: யோ. வ. பிலிப் உப செயலாளர், முகமது நிசாம் பொருளாளர்: அ. அலக்சாண்டர் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

# மூளைசாலிகள் வெளியேற்றம்

ஜெனீவா ஜன 25

கடந்த 20 ஆண்டு காலத்தில் வளர்முக நாடுகளிலிருந்து வளர்ச்சியுற்ற நாடுகளுக்கு மூளைசாலிகள் வெளியேற்றம் அதிகரித்துள்ளது.

புள்ளி விபரங்கள் இதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

சர்வதேச தொழில் ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றின்படி மூளைசாலிகளின் வெளியேற்றம் பெருகியுள்ளது. 1960 தொடக்கம் 1975 வரை கனடா, அமெரிக்கா' பிரிட்டன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வளர்முக நாடுகளிலிருந்து 420, 000 நிபுணர்கள் சென்றுள்ளதாக அன்க்டாட் (ஐ. நா, ஏஜன்ஸி செயலகம்) அறிவித்துள்ளது. இதில் 75 சதவிகிதத்தினர் கனடா, அமெரிக்கா, பிரிட்டனுக்கு சென்றுள்ளனர்.

நிபுணர்களின் வெளியேற்றத்துக்கு முக்கிய காரணம் புதிதாக விடுதலை பெற்றுள்ள நாடுகளின் தொழிற்துறை அமைப்பில் உள்ள 'கோணல் மாணல்' என்று கூறப்படுகிறது. தொழிற்துறையில் முன்னேறிய நாடுகளை சார்ந்திருத்தல் தொழிற்துறை வளர்ச்சி நிகழ்வு ஒரேவேகத்தில் இல்லாதிருப்பது பழமை தட்டி விட்ட தொழில் நுட்பம் பிரயோகத்தில் இருப்பது போன்ற காரணங்கள் பயிற்சி பெற்ற ஊழியர்களை 'உற்பத்தி' செய்வதற்கு தடையாக உள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.

புத்திஜீவிகளின் வெளியேற்றத்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. டாக்டர், என்ஜினியர், விஞ்ஞானிகள் மிக ஆற்றல் நிறைந்த வயதில் வெளியேறுவதும் பெரும் இழப்பாகும. லண்டன் பொருளியல் அரசியல் இயல் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ரிச்சர்ட் டித்மஸ் தரும் புள்ளி விபரம் வருமாறு: 1969— 1977 காலத்தில் அமெரிக்காவுக்கு வளர்முக நாடுகளைச் சேர்ந்த 150, 000 என்ஜினியர்கள், டாக்டர்கள் வெளியேறியதால் அமெரிக்கா 500 கோடி டாலர் பணத்தை சேமித்தது 1968 — 1974 காலத்தில் இலங்கையிலிருந்து மூளைசாலிகள் பிரிட்டனுசகு வெளியேறியதால் இலங்கைக்கு ஏற்பட்ட நஷ்டம் 4 கோடி டாலராகும்''

# கடலட்டை ஏற்றுமதி மூலம் ரூ. 50 லட்சம் செலாவணி

பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் கடந்த ஆண்டில் கடலட்டைகளை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் சுமார் 50 இலட்சம் ரூபா அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துள்ளது,

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்திற்கூடாக இச்சங்கம் சிங்கப்பூருக்கு கடலட்டைகளையும் பங்களாதேசத்திற்கு சங்குகளையும் ஏற்றுமதி செய்து வருகின்றது கடந்த ஆண்டில் சங்குகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் இச்சங்கம் ஒரு இலட்சத்து 96 ஆயிரம் ரூபாவை அந்நியச் செலாவணியாக பெற்றுள்ளது.

சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. எம். குணரத்தினம், கடற்றொழில் பரிசோதகர் திரு. எல்.பி. பிலிப் ஆகியோர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனுகை இவ்வாறு பெருந்தொகையான கடலட்டைகள் சங்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இவ்வருடத்தில் மேலும் அதிக அளவில் இவற்றை சேகரித்து ஏற்றுமதி செய்யவும் இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

# "இறைவன் பெயரால் மோசடிசெய்வோரை குருவாக ஏற்றுக்கொள்ளக்கூடாது"

-- சுவாமி கிருஷ்ணசுகானந்தஜீ

மாவிட்டபுரம்)

'இறைவன் பெயரால் மோசடி செய்பவர்களை நாம் குருவாக ஏற்கக்கூடாது. பெரிய தாடி வளர்த்தவர்களையும் நம்பி அவர்கள் பின் செல்லக்கூடாது. இறைவனை உணரும் மேலான ஞானம் எவரிடமிருக்கிறோ அவரையே குருவாக ஏற்கவேண்டும். இந்த வகையில் சுவாமி குரு மகராஜ் அவர்களை குருவாகப் பெற்றதால் நாம் பெருமைப்படுகிறோம். குருவுக்குள்ள சகல அம்சமும் பொருந்தியவர் அவர்.'

இவ்வாறு சுவாமி குருமகராஜ் அவர்களின் சீடர் சுவாமி கிருஷ்ண சுகானந்தஜீமாவிட்டபுரத்தில் இடம்பெற்ற தமது அருளுரையின்போது கூறினர்.

மாவிட்டபுரம் சந்தசுவாமி கோவில் வடக்கு வீதியிலுள்ள மண்டபத்தில் நடந்த இந்த அருளுரையில் அவர் மேலும் கூறியதாவது:—

'இந்த உலகத்திலே வாழ்வதும் சாவதும்தான் மனித வர்க்கத்தின் குறிக்கோள் என்ற நிலை மாறவேண்டும். இறைவன் இந்த உலகத்தைப் படைத்து நமக்காக எத்தனையோ வசதிகளை ஏற்படுத்தித்தந்திருக்கிறுன். ஆனுல் 'நாமோ இறைவனின் சக்தியை உணராது ஏதோ ஒன்றுக்காக ஏங்கி எமது சக்தியை விரயம் செய்துகொண்டிருக்கிறோம்.

இந்த உலகில் நாம் செய்வதெல்லாம் இறைவன் செயலே ஒழிய நமது அல்ல. அந்த இறைவனை நாம் உணர்வுபூர்வமாக அறியவேண்டும். அதற்குத் தியானம் மிகவும் சிறந்த வழியாகும். சைவமக்கள் ஆலயத்திற்குச் சென்று விபூதி அணிந்துவிட்டு அடுத்த நிமிடமே தீய செயல்களில் ஈடுபடுவதால் எவ்வித பயனுமில்லை. அதேபோல்தான் தியானமும் மேலான ஞானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செய்யப்படவேண்டும். அல்லது அதனுல் பயனில்லை. இருட்டிலே வாழ்ந்து இருட்டையே அனுபவிக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின் நமக்கு மேலான ஞானம் ஏற்பட வேண்டும். அதற்குச் சிறந்த குருவை நாடி அவர் காட்டும் வழியை பின்பற்றவேண்டும்.

குருமகாராஜ் சுவாமிகளது ஆச்சிரமம் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலுமுண்டு. இந்த மார்க்கத்தில் ஈடுபட்டு உயர்ந்த ஞானத்தை அறிய விரும்புவோர் இந்த ஆச்சிரமங்களுடன் தொடர்புகொண்டால் இலவசமாக போதனைகள் நடத்தி அவர்களுக்கு மெய்யான அறிவு கிடைக்க வழிவகுப்போம்' என்றுர்.

# ஆசிரியமாணவர்களுக்குஇனி 10 பாடங்களில் விரிவுரைகள்

(மட்டக்களப்பு)

இவ்வருடம் முதல் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரிய மாணவர் களுக்குப் பத்துப்பாடங்களில் விரிவுரைகள் வழங்கப்படும்.

இதன் பிரகாரம் ஒவ்வொரு ஆசிரிய மாணவரும் கல்வி, கல்வி உளவியல், உடற்கல்வி விசேட பாட நெறிக்குரிய நான்கு பாடங்கள் உட்பட பொதுக் கல்வியாக சமயம், தாய்மொழி ஆகியவற்றுடன் தெரிவுப்பாடமாக ஆங்கிலம், இனைப்பு மொழி, இசை, நுண்கலை, நடனம், விவசாயம், ஆகியவற்றில் மனையியல், கணிதம், விஞ்ஞானம் ஒன்றை தெரிவு செய்யவேண்டும். முன்பு பொதுக்கல்வியாக ஏழு பாடங்கள் இருந்தபோதிலும் தற்போது சமயம், தாய்மொழி ஆகிய இரண்டு பாடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனுல் சமயம் விசேட பாடமாகப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் சமயமும், தாய்மொழி விசேட பாடமாகப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் தாய்மொழியும் பொதுப்பாடமாக மேற்கொள்ள முடியாது. இந்நிலையில் மேற்படி ஆசிரிய மாணவர்களுக்குரிய இரண்டாம் பொதுப்பாடம் என்னவென புரியாமல் அவர்கள் திண்டாடுகிறுர்கள்

அதேநேரத்தில் தெரிவுப் பாடங்களில் ஒன்றுக விஞ்ஞானம் இடம் பெற்றுள்ளது போல் வர்த்தகமோ, சமூகக் கல்வியோ இடம்பெறவில்லை என ஒரு சாரார் குறைபட்டுக் கொண்டார்கள்.

இவவருடம் முதல் ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரிய் மாணவர்கள் கடந்த காலங்கள் போல் அன்றி தொடர்ந்து இருவருடங்கள் கல்லூரியிலும் மூன்றும் வருடம் வெளிக்களத்திலும் பயிற்சியைப் பூர்த்தி செய்வார்கள்.

1981ம் ஆண்டு பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் 1982 ஜூலையுடன் கல்லூரியை விட்டு வெளியேறி ஒன்றரை வருட வெளிக்களப் பயிற்சியுடன் தங்கள் பயிற்சியைப் பூர்த்தி செய்வர்.

இவர்கள் வெளியேறும் போது 1980ல் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு 1981 முதல் வெளிக்களப் பயிற்சி

(6ம் பக்கம் பார்க்க)

# 'அனைவரும் இணைந்து புதிய கல்வித்திட்டம் தயாரிப்போம்'

## சரத் யோசனை

(கொழும்பு)

இலவச "கல்வித் திட்டத்துக்கு சாவுமணி அடிக்கப்படுகிறது என்பது கல்வி வெள்ளை அறிக்கை தொடர்பான முக்கிய குற்றச்சாட்டாகும் அத்துடன் ஆசிரிய நியமனத்துக்கே நிதி இல்லாதபோது தொழில்நுட்பக்கல்வி முதலிய பெருமளவு பணம் தேவைப்படும் இவ்வெள்ளை அறிக்கையின் திட்டங்களில் பணமின்றிச் செயல்படுத்தக்கூடியவற்றையே அரசு செய்யும் அவை பணம்படைத்தவர்களுக்கு வாய்ப்பானவையாகவே அமையும் அதுதான் இந்த அரசின் திட்டம் என்பதும் முக்கிய குற்றச்சாட்டாகும். ஆரம்ப கல்வி தொழில் நுட்பக்கல்வி ஆசியவற்றை தனியாரிடமும் ஒப்படைக்கும் திட்டமும் பலத்த கண்டனத்துக்குள்ளானது.

கொத்தணி பாடசாலைகள், ஒரு நிலைப்பாடசாலைகள் 5ந் தர புலமைப்பரிசில் 8ந் தரப் பரீட்சை பல்கலைக்கழக அநுமதிக்கு ஆங்கில தேர்வு போன்றன பெரும் விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளாயின,

வெள்ளை அறிக்கை மீது எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் றோயல் கல்லூரியில் கல்விபயிலும் மாணவரின் வீட்டு வேலைக்காரர்கூட உணவு முத்திரை பெற்றவராக இருக்கமாட்டார். அப்படியிருக்க சாதாரண ஒரு குடும்பத்துப் பிள்ளை அங்கு சேர்ந்து பயில முடியும்'' என்று அரசு நம்புகிறதா! என்று கேட்டார்,

திரு. அமிர்தலிங்கம், திரு. தொண்டமான் ஆகியோர் கொத்தணிப் பாடசாலைகள் மொழிவாரியாக அமைய வேண்டும் என்றும், ஜனுப் ஹமீத் முஸ்லிம் பாடசாலைகள் தனியாக அமைய வேண்டும் என்று கோரியபோது, ஹப்புத்தளை உறுப்பினர் திரு. லொக்குபண்டார கொத்தணித் திட்டத்தால் யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழருக்கு பாதிப்பு ஏற்படாது பார்க்க வேண்டும். என்று சொன்னார். இதுபற்றி தாம் கவனத்தில் கொள்வதாக கல்வி அமைச்சர் சொன்னார். பல்கலைக்கழகம் புக இருதடவைகளுக்குப்பதில் தற்போதுள்ள போல் 3 தடவைகள் சந்தர்ப்பமளிக்க வேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் பற்றுக்குறை, சம்பளம். கஷ்டப்பிரதேசப் பாடசாலைகள் குறித்தும் பெரிதும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆங்கில போதனைக்கு ஏகோபித்த வரவேற்பு இருந்தது.

தனியார் பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளைவிட நல்ல பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுவதிலிருந்தே இந்நாட்டின் கல்விக் கொள்கையில் மாற்றம்தேவை என்பது தெளிவாகப் புலனாகியது; ஆனல் இந்த வெள்ளை அறிக்கை மயக்கமாக இருக்கிறது என்றார் அமிர்தலிங்கம்.

இது ஒரு வர்த்தக திட்டம் என்று வர்ணித்த அரசாங்க உறுப்பினரான கலாநிதி தகநாயக்க, தற்போதைய கல்விக் கொள்கைக்கு சில திருத்தங்களே வேண்டும் என்றார்.

மாணவரின் ஆர்ப்பாட்ட நடவடிக்கைளுக்கெல்லாம் கலவான உறுப்பினர் சார்ந்தவர்களே காரணம் என்று அரசு தரப்பில் நேரடியாகவே குற்றஞ்சுமத்தப்பட்டபோது எதற்கும் கலக்காதவரான திரு. சரத் முத்தட்டுவேகம இந்த வெள்ளை அறிக்கையை முற்றாகவே கைவிட்டுவிட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து நல்லதொரு திட்டத்தை யாப்போம் என்று அழைப்பு விடுத்தார்.

உலகெங்கும் வாழும் தமிழர் பொங்கல் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். அதுபோல்ஆங்கில கல்வித்திட்டத்தால் தாய் மொழி பாதிப்படைந்துவிடாது என்ற அமைச்சர் காமினி திசாநாயக்க எதிர்க்கட்சித் தலைவரின் காலஞ்சென்ற தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் போன்ற தலைசிறந்த வழக்கறிஞர்கள், கல்விமான்கள் இந்நாட்டு கல்வித் திட்டத்தின் கிழேயே உருவானார்கள் என்றார்.

கல்வித்துறையில் அனுபவம் மிகுந்தவரான பண்டிதர் கா. பொ. இரத்தினம் சற்று ஆக்ரோஷத்துடனேயே பேசினார், அவரது பேச்சை திடீரென்றே நிறுத்தி ளெளிநாட்டமைச்சரை சபாநாயகர் அழைத்தபோது கல்வியில் பெயர்பெற்ற வடமராட்சியின் பருத்தித்துறை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அதற்கு ஆட்சேபம் தெரிவித்து வெகுண்டெழுந்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் சமாதானமாகவே மேலும் அவர் தொடர்ந்து பேசுவதற்கு அப்போது வழியமைத்துக்கொடுக்கவும் பண்டிதர் தொடர்ந்தார்.

வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணிக்கு முடியவிருந்த விவாதம் 8 மணி வரை நீடிக்கப்பட்டது. ''வெள்ளை அறிக்கையின் 196 அம்சங்களையும் விரிவாக மீண்டும் ஆராய்வோம். சிலவற்றை அப்படியே அமுல் நடத்துவோம்; சிலவற்றைத் திருத்துவோம்: சிலவற்றை நீக்குவோம்'' என்றார் கல்வி அமைச்சர். (ம)

## சிவராத்திரி விடுமுறை இவ்வருடமும் வழமைபோல்?

(மட்டக்களப்பு)


மகா சிவராத்திரி விடுமுறை வழங்குவது தொடர்பாக அரசாங்கம் இதுவரை இந்துக்களின் கோரிக்கையை செவிசாய்ப்பதாகவில்லையென இந்துசமயத்தவர்கள் மத்தியிலிருந்து பரவலான புகார்கள் எழுந்துள்ளது.

சிவராத்திரிக்கு வருடாந்தம் வழங்கப்படும் பொது விடுமுறையை அன்றையதினம் வழங்காமல் மறுநாள் வழங்க வேண்டுமென்று நீண்டநாட்களாக இந்துசமய ஸ்தாபனங்களும், பொதுமக்களும் அரசாங்கத்தை கோரிவந்தனர். இது [illegible]ர்க்கப்படவில்லை.

இந்[illegible]லையில் 1979ம் ஆண்டு [illegible] இந்த விடுமுறை மறுநாள் வழங்க வேண்டுமென்று பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பதவி வகித்த திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமவைநீதிஅமைச்சராகவிருந்த போது திரு. கே. டபிள்யூ, தேவநாயகம், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. செள. தொண்டமான் ஆகியோர் சந்தித்து உரையாடியபோது 1980ம் வருடம் முதல் சிவராத்திரிக்கு மறுநாள் விடுமுறை அமுல் செய்யப்படுமென அப்பேச்சுவார்த்தையின் போது தெரிவிக்கப்பட்டது.

ஆனல் 1980, 81,82ம்ஆண்டு சிவராத்திரி விடுமுறை வழமைபோல்தான் வழங்கப்பட்டது. எவ்வித மாற்றமும் இருக்கவில்லை. (அ)

## தொண்டனை நினைவுகூர்வோம்



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அமரர் ப, மு. சங்கரப்பிள்ளை சிறந்த சமூகசேவையாளராகவும், தன்னலமற்ற பண்பாளராகவும் திகழ்ந்தார். இவரது அயராத மக்கள் சேவையைப் பாராட்டி அரசாங்கம் 1952ம் ஆண்டு சமாதான நீதவான் பட்டத்தையும், 1955ம் ஆண்டு முதலியார் பட்டத்தையும் அன்னாருக்கு வழங்கியது.


இவர் 1952ம் ஆண்டிலிருந்து 1968ம் ஆண்டுவரை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவராகக் கடமையாற்றி, அவ்வைத்தியசாலையை ஆசியாவிலேயே சிறந்ததாக உருவாக்கினார். 1947ம் ஆண்டு தொடக்கம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்து அக்கட்சியின் வளர்ச்சிக்காக அமரர் ஜி,ஜி, பொன்னம்பலத்துடன் சேர்ந்துழைத்தார்.

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் தலைவராக 1959ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டுவரை பதவி வகித்தகாலத்தில் பாமரமக்களுக்கும் அங்கவீனர்களுக்கும் உதவி புரிவதிலேயே தனது சேவையை அர்ப்பணித்திருந்தார். வடமாகாண ஆலை உரிமையாளர் சங்கத்தின் தலைவராகவும் இவர் பணிபுரிந்தார்.

பல பிரச்னைகள் தொடர்பாகத் தம்மை அணுகிவரும் தொகுதி மக்களை இவர் இன்முகத்துடன் வரவேற்று, அவர்களின் பிரச்னைகளையும், குறைபாடுகளையும் கேட்டறிந்து தீர்த்து வைத்தார்,

அன்னாரின் பதினைக[illegible] நினைவு தினமான இன்று அவரது சேவைகளையும் நினைவுகூர்வாமாக.

—ஓர் அன்பன்.



''தமிழ்ஒலி''மன்ற நிர்வாகசபை உறுப்பினர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையுடன் இங்கு காணப்படுகின்றனர்.

### ''பரந்தன் வேலை நிறுத்தத்துக்கு:

## மனிதாபிமான முறையில் 'தீர்வு காணவும்''

### சாவ. நகரசபைத் தலைவர் கோரிக்கை

[சாவகச்சேரி]

''பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் கடந்த 75 நாட்களாக சுமார் 400க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள் சட்டப்படி வேலை செய்யத தொழிலாளர்களையும் 24 மணித்தியாலமும் வேலை செய்யும்படி நிர்வாகத்தினர் வற்புறுத்திக்கதவடைப்புச் செய்தனர் பின் கூட்டுத்தாபனத்தலைவரின் வேண்டுகோளின்பேரில் வேலைக்குத் திரும்பிய சில ஊழியர்களுக்கு வேலை கொடுக்க நிர்வாகம் மறுத்ததில் இருந்து மீண்டும் தொழிற்சங்க உரிமைகோரி வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளார்கள் இப்பிரச்சினைகளுக்கு மனிதாபிமான முறையில் தீர்வு காணவகை செய்யுமாறு நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பரந்தன் இரசாயனத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் சம்பந்தமாகச் சாவகச்சேரி நகரசபை முதல்வர் திரு. சி. க. மயில்வாசனம் ஓர் அறிக்கைமூலம் மேற்கண்டகோரிக்கையை விடுத்துள்ளார்.

புதிதாக ஊழியர்களை வேலைக்கெடுப்பது நீதியற்ற செயலெனவும்' வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்க அவர்களுடைய இடங்களைப் புதிய தொழிலாளர்கள் சுவீகரிக்க நினைப்பது மனிதாபிமானமற்ற செயல் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நிரந்தர பிரதம கல்வி அதிகாரி

(கரவெட்டி)

யாழ். பிரதம கல்வி அதிகாரிகளில் ஒருவரான ஜனுப் எம். எம். மன்சூர் இம்மாதம் முதல் நிரந்தர பிரதம கல்வி அதிகாரியாக கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே. பொன்னம்பலம், சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா கல்வி அதிகாரிகளாகப் பதவி உயர்வுபெற்றுள்ளார்கள்.

## 300 ரூபாவாக உயர்வு

(யாழ்ப்பாணம்)

குடும்பக்கட்டுப்பாட்டுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்வோருக்கு, ஊக்குவிப்புப் பணமாக 300 ரூபா இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

ஆரம்பத்தில் 500 ரூபாவாக இருந்த ஊக்குவிப்புப் பணம் 200ரூபாவாகக்குறைக்கப்பட்டிருந்தது. இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம், 100 ரூபா மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க குடும்ப ஆஸ்பத்திரிகளில், குடும்பக்கட்டுப்பாட்டு சிகிச்சை செய்பவர்களுக்கே இதுவரை காலமும் ஊக்குவிப்புப்பணம் வழங்கப்பட்டுவந்தது. இனிமேல் அரசாங்க குடும்பக்கட்டுப்பாட்டுப்பகுதியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளில் மேற்படி சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கும் இப்பணம் வழங்கப்படும்.

ஆனைப்பந்தி, இணுவில் மக்லியட், மானிப்பாய் மெமோறியல், திருநெல்வேலி சென்றல் நேர்சிங் ஹோம், மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி ஆகிய 6 ஆஸ்பத்திரிகளே அவையாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## விவசாய ஆசிரியர்

(அரியாலை)

யாழ் பரியோவான் கல்லூரியில் விவசாய ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. பி. எம். கருணநாயகம் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விவசாய விசேஷ ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொண்டு மீண்டும் ஆசிரியர் பதவியை ஏற்றுள்ளார்.

கொக்காவில் சென்னை ரி. வி. ஏரியல் அமைப்புக்கு

வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்

பெப்ரவரி மாதம் ஆரம்பமாகும் ரூபவாஹினி இலங்கைத் தொலைக்காட்சி ஒலிபரப்பைப் பார்த்து மகிழ்வதற்கான ரி. வி.ஏரியல் அமைப்புக்கும் பழுதடைந்த றேடியோ, மணிக்கூடுகளைத் திருத்திக்கொள்வதற்கும், பழைய புதிய பாடல்களைப் பதிவுசெய்வதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

VENUS RECORDING RADIO WATCH WORKS

266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில்

# 27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான
பினன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ.எம். எக்ஸ். லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர். சேனநாயக்கா ஏ. எம். எக்ஸ். ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப் பட்ட பங்கீட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக் கு முன்னர் உள்ள முத லீட்டுவைப்பு | வரி விதிப்புக் கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,326 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,043 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,699 | 145,561 | 145,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

✦ இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

31-3-81 வரை ரூபா 10 கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை

## த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

மூன்றும் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு-1
கிளை: 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680
மற்றும் 14 கிளைகள் நாடு பூராவும்.



## குறைந்த சலார்!

முதலாவது ஆண்டு நிறைவையொட்டி இச்சலுகை வழங்கப்படுகிறது!!

சகல அளவு போட்டோக்களுக்கும்

## ஸ்ருடியோ டில்கா

202, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8174

பஸ் நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடியில் அமைந்துள்ளது.


### யாழ். பல்கலைக்கழக

# விசேஷ, பொதுவிஞ்ஞான பரீட்சைகளின் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 1981ம் ஆண்டு நடைபெற்ற விசேட விஞ்ஞான பட்டதாரி பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரங்களை உபவேந்தர் திரு. சு. வித்தியானந்தன் அறிவித்துள்ளார். முடிவு விபரம் வருமாறு:

**முதலாம் வகுப்பு**

செல்வி கே. சோமசுந்தரம் இரசாயனம்.

**இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு:**

செல்வி கே. சண்முகநாதன் இரசாயனம், ஜனாப் எம். ரி. சியாட்முகமட் — இரசாயனம், திரு. எஸ். தியாகலிங்கம், — தாவரவியல், செல்வி எஸ். ரதிதேவி — தாவரவியல், திரு. எ. எம். சவரிமுத்து தாவரவியல்.

**இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவு:**

ஜனாப் எம். எம். எஸ். மொகமட் பையிஸ் — பெளதீகம், திரு, பி, எம், சுவேந்திராஜா பெளதீகம்செல்விரி,சத்தியரூபி தாவரவியல்.

**சாதாரணசித்தி:**

திரு. எம். சங்ககுமாரன் பெளதீகம், செல்வி எஸ், நந்தினி — தாவரவியல், செல்வி ஜே. மோகனஜயலட்சுமி — இரசாயனம், செல்வி எ. எல். நஸீராபீபீ — இரசாயனம்.

பொது விஞ்ஞான பட்டதாரிகள் பரீட்சையில் முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு ஆகியவற்றில் எவரும் சித்தி பெறவில்லை.

**பொதுவிஞ்ஞானம் சாதாரண சித்தி:**

திரு.சிஜே.எப்.பிகுராடோ, திரு. ரி. வி. கனகவேல்ராஜா, திரு. கே. வி. சபேஸ்குமார், திரு. வி. ஆனந்தகுமார், செல்வி சி. புவனேஸ்வரி, திரு. கே. தவயோகநாதன், திரு. எஸ். வி. கருணேந்திராஜா, ஜனாப் எ. எச்.அப்துல் அஸீஸ் ஜனாப் எச். எம், ஹஸ்னபர், திரு. கே. செயிந்தன், திரு. வி. தங்கராசா, திரு. கே. லோகேந்திரன், செல்வி வி, திரவியம், திரு. எஸ். ஜெயசந்திரன், திரு. எஸ். கிருஸ்ண குமார், திரு. ரி. அருமைத்துரை, ஜனாப் எம். எம். சம்சுதீன். (உ)

### பிரியாவிடை

(மண்டைதீவு)

தீவுப்பகுதி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். சிவராசா யாழ். பல்கலைக்கழக வைத்திய விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றதையொட்டி அன்னாருக்குப் பிரியாவிடை வைபவம் புளியங்கூடலூரில் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. எஸ். கந்தப்பு தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் இப்பகுதி சமாதான நீதிபதி திரு. சி. குருசாமி ஆசிரியர், திரு. எஸ். இரத்தினம் ஆகியோர் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

செல்வி பாலாம்பிகை நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

### யாழ். கிறிஸ்தவ ஐக்கிய சங்கம்

(அரியாலை)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் யாழ் றிம்மர் மண்டபத்தில் சங்கத்தலைவர் பேரருட் திரு. டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக பேரருட் திரு. டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகையும், உப தலைவர்களாக திருவாளர்கள்: சீ. ஈ. ஆனந்தராசா, ஜே. கி. அரசரத்தினம் ஆகியோரும், பொதுச் செயலானராக அருட். திரு. யே. சர்வானந்தன் அடிகளாரும், உப செயலாளராக அருட்திரு.எஸ்.சுகுணனந்தன் அடிகளாரும், பொருளாளராக திரு. ஜி. ஜி. அன்னப்பாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்க்த்தின் வருடாந்த எழுப்புதற் கூட்டத்தை யாழ். கோட்டை தேவாலயத்தில் ஆவணி மாதம் நடாத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. (அ)

## வரணி கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை

(சாவகச்சேரி)

துன்னாலை தெற்கு மாணிக்கம் சிவராசசிங்கம் அல்லது சிவலிங்கம் (வயது36) என்பவரை வரணிக் கொடிக்காடு என்னுமிடத்தில் வைத்துப் பொல்லால் அடித்துக்கொலை செய்ததாகச் செல்லப்பா செல்வநாயகம், சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை ஆகியோருக்கு எதிராகச் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில கடந்த 80ம் ஆண்டு செப்டம்பர் 15ம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முன்னர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியும் தற்போதைய மல்லாகம் நீதிமன்ற நீதிபதியுமான திரு. சி. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

அரசதரப்பில் பொலிஸ் சார்ஜன்ட்வி. செல்லையாவுடன் சட்டத்தரணி வி. செல்லத்தம்புவும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செல்வி நளினி கணேசயோகனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராகி வாதிட்டனர்.

இருதரப்புச் சட்டத்தரணிகளின் தொகுப்புரையின் முடிவில் சாட்சிய முரண்பாடுகள் காரணமாக எதிரிகளை விடுதலை செய்வதாக நீதிபதி விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

### மாதர் சங்க ஆண்டு விழா

(மண்டைதீவு)

புளியங்கூடலூர் மாதர் சங்கத்தின் ஓர் ஆண்டு நிறைவு விழாவும் கலை பொருட்காட்சியும் சங்கமண்டபத்தில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். கந்தப்பு தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை எம். பி. க. பொ. இரத்தினம் கலந்து கொண்டு கலைப் பொருட்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

விழா இறுதியில் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. (அ)

## வேறு பெண்ணுக்காக மனைவியைக் கைவிட்டதால் வந்தது வினை!

(வவனியா)

மனைவியைக் கைவிட்டு வேறு பெண்ணுடன் தலைமறைவாகிய ஓர் அரச ஊழியரை மோசடிகள் சம்பந்தமாகப் போலிஸ் தேடிவருகிறது.

வவனியாச் சச்சேரி பதிவாளர் பிரிவு ஊழியரான இவர் செய்த மோசடிகள் பற்றி ஆத்திரமுற்ற இவரது மனைவி வவனியா அரசாங்க அதிபருக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து அரச அதிபர் இதுபற்றிப் பொலிசாருக்கு அறிவித்தார்.

இதனையடுத்துப் பிரஸ்தாப ஊழியரின் வீட்டைச் சோதனையிட்ட பொலிசார், பல மாற்றங்கள் செய்சப்பட்ட பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பலவற்றை அங்கு கைப்பற்றினர்.

பொலிசார் மேலும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (அ)

### அதிகாரிகளிடம் சிக்கிய வியாபாரிகள்

(கரவெட்டி)

நெல்லியடி நவீன சந்தையில் நிறுத்தல் அளவைப் படிகளைப் பாவித்து வியாபாரம் செய்த வியாபாரிகள் பலர் யாழ், உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையில் சிக்கிக் கொண்டார்கள்.

வியாபாரிகள் பாவித்த நிறுத்தல் அளவைப் படிகள் பறிமுதல் செய்யப்பட்டன. (அ)

### கிறிஸ்தவ ஐக்கியசங்கம்

## வன்செயல்களில் உயிரிழந்த 8குடும்பங்களுக்கு நிதிஉதவி

[அரியாலை]

1981ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட வன்செயலின்போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தோரின் குடும்பங்களுக்கு இருபத்திரண்டாயிரம் ரூபாவை யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினத்தின் மகள் செல்வி பத்மராணிக்கு இரண்டாயிரம் ரூபாவும் புத்தூரைச்சேர்ந்தகாலஞ்சென்ற நடேசு சண்முகத்தின் மனைவி திருமதி இராசலட்சுமிக்குபத்தாயிரம்ரூபாவும்வரணியைச் சேர்ந்தகாலஞ்சென்ற பாலஜோதியின் சகோதரி செல்வி சிவயோகம் வேலுப்பிள்ளைக்கு ஆறாயிரம் ரூபாவும் கோப்பாயைச்சேர்ந்த காலஞ்சென்ற சு. பரமசிவத்தின் சகோதரி செல்வி சு. பராசக்திக்கு ஆறாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. இப்பணம் தனித்தனி அவர்கள் கணக்கில் வர்த்தக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அவர்களிடம் புத்தகங்கள் கையளிக்கப்பட்டிருப்பதாக சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் சங்கப் பொருளாளர் திரு, கி. கீ. அன்னப்பா தெரிவித்தார்.

**79ல் பாதிப்புற்ற 4 குடும்பங்கள்**

இது தவிர 1979ம் ஆண்டு ஜூலை மாதம் 14ந் திகதி நாட்டில்ஏற்பட்டவன்செயலின் போது இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்குஇலக்காகி மரணமடைந்தோரின் நான்கு குடும்பங்களுக்குத் தொழில் வாய்ப்பளிசகுமுமாக தேசிய கிறிஸ்தவ சங்கம் அன்பளிப்பாக வழங்கிய ஐம்பதினாயிரம் ரூபாவில் நாற்பதினாயிரம்ரூபா முதலிட்டு சுயதொழில் நிலையம் ஒன்றை யாழ்ப்பாண கிறிஸ்தவ ஜீக்கிய சங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் இக்கூட்டத்தில் பொருளாளர் தெரிவித்தார்.

யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்தக் கூட்டததிற்கு சங்கத்தலைவரும் தென்னிந்திய திருச்சபை யாழ். மறை மாவட்டப் பேராயர் பேரருட்திரு. டி. ஜே.அம்பலவாணர் ஆண்டகை தலைமை வகித்தார். (அ)

### இரவு விருந்து

(அரியாலை)

யாழ்ப்பாணம் புனிதர் யோவான் கல்லூரிக்கு சிநேகபூர்வமாக வருகைதந்த கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்திரு ஹென்றி பீற்றேவின் புதல்வர் கலாநிதி டேவிட் பீற்றேவையும் அவரது பாரியாரையும் கௌரவித்து பழைய மாணவர் சங்கம் சார்பில் இரவு விருந்தளிக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு, ஜே. ரி, செல்லையாவின் தலைமையில் நடைபெற்ற இவ் விருந்தில் விருந்தினரை வரவேற்று கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன், பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. கே. நேசையா ஆகியோர் பேசினர் பெருந் தொகையான பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர். வைத்திய கலாநிதி அருளானந்தம் நன்றி தெரிவித்துப்பேசினர். (அ)

## பிரமாலயம் அமைக்கமுயற்சி

(அரியாலை)

அரியாலை மேற்கு வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு பிரமாலயம் அமைக்கும் முயற்சியை ஆலய அறங்காவலர் சபை மேற்கொண்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழுவின் தலைவர் திரு. எஸ். கே. மார்க்கண்டுவும் அதன் செயலாளர் திரு. தா. தேவமதுரமும் செய்து வருகின்றனர். (க]

# இன்றைய பலன்

தை மாதம் 12ம் திகதி
திங்கட்கிழமை
(25—1—82)

மேடம்: இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள், வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும், தாய்வழியால் தனவரவிற்கு இடமுண்டு, குடும்ப வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும், நல்ல நாள்.

இடபம்: காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார், உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித்தரும், தானதருமங்களில் விருப்பம் மேலிடும், இல்லம் இன்று கட்டி வெல்லம்.

மிதுனம்: தூரத்துப் பயணம் துயரம் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்திய செலவுகளுக்கு இடம் உண்டு, இன்று சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்படல் நன்று.

கடகம்: மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் தென்படும், குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும், வருமானத்திலும் உயர்ச்சி கிடைக்கும், புதுமனை கட்டுவதற்குக்கூடச் சிலர் ஆலோசிக்கலாம்.

சிங்கம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும், எதிர்பாராத விதமாகச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும், உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும், நிதானம் வேண்டும்.

கன்னி: புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும், பெரியோர்களின் உதவிக்கு இடம் உண்டு, கொண்ட கொள்கையில் அதிக உறுதிப்பாடு தென்படும், சிறப்பானதினம்.

துலாம்: உத்தியோக உயர்விற்கு இடமுண்டு, சிலருக்கு புதிதாக தொழில் வாய்ப்புக்கு இடமுண்டு, நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும், செய்தொழில் மத்தியில் தெய்வத்தின் துணையுமுண்டு.

விருச்சிகம்: உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது, எதிலும் ஒரு புதிய உத்வேகம் காணப்படும், வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படுவதற்கு இடமுண்டு, வரவேற்கவேண்டியதிளம்.

தனு: கடன் தொல்லைகள் கவலையைத்தரும், உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும், நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத்தரலாம், புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உசாராகவும் இருக்கவும்.

மகரம்: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம், கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும், சமயோசித புத்தியினுல் எதையும சமாளிக்கலாம்.

கும்பம்: சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள், குடும்பத்தில் பிணைப்புக்கள் பலமடையும், சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

மீனம்: கடந்தகால எண்ணங்கள் அலைமோதும், அடுத்துக்கெடுப்பதற்குச் சிலர் முனைவர், சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நாய்களுக்கு விசர்நோய் தடுப்புஊசி

(பண்டத்தரிப்பு)

நாய்களுக்கு விசர்நோய் வராது தடுக்கும் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் பிரிவில் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் மூன்றும் திகதி வரை பாரிய தடுப்பு ஊசி போடும் இயக்கமொன்று நடாத்தப்படவுள்ளது.

பண்டத்தரிப்புபகுதியில் 36 நிலையங்களில் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வீட்டு நாய்களை இந்த நிலையங்களுக்கு கொண்டு சென்று தடுப்பூசியை தவருது போடுவிக்க வேண்டும் என்றும் பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் திரு. எஸ். மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்;

பண்டத்தரிப்பு பட்டினப் பிரதேசத்தில் நீண்டகாலமாக பெரும் தொல்லை கொடுத்து வரும் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கும் திரு. மாணிக்கவாசகர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ருர்.

## ஆசிரிய—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபட்ட ஆசிரிய மாணவர்கள் மீண்டும் ஜுலை முதல் ஆசிரிய கல்லூரியில் 6மாதப் பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு தங்கள் பயிற்சியை முடிப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## முன்மாதிரியாக விளங்கினுர்



உடுவிலை உறைவிடமாகக் கொண்ட அமரர் திரு. வை. கந்தையா, இலங்கையின் பல பாகங்களிலும் சுகாதார பரிசோதகராகவும்' பிரதம சுகாதார பரிசோதகராகவும் 35 ஆண்டுகள் வரை கடமையாற்றி 1975ம் ஆண்டில் அரசாங்க சேவையிலிருந்துஇளைப்பாறினுர். இவரது சேவைக் காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட பல பாரிய நோய்களான வைசூரி, வாந்திபேதி, இளம்பிள்ளைவாதம் ஆகியன பரவாது தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பலரது நன்மதிப்புக்களையும் பெற்ருர்.

நாவன்னம, மக்களைத் தம் வசம் கவரும் திறள் ஆகிய நற்பண்புகளால் பல சுகாதாரப் பிரச்னைகளை எளிதாகத் தீர்க்கும் அபாரசக்திகொண்டவராக அமரர் கந்தையா விளங்கினுர்,

திரு கந்தையா சக உத்தியோகத்தர்களுடன் பழகும் தன்மை, ஆலோசனைவழங்கும் முறை ஆசியவற்றினுல், மன்னுர், வவனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிளைச் சங்கங்களின் தலைவராசப் பத்துவருடங்களும், தாய்ச் சங்கத்தின் உபதலைவராக ஏழு வருடங்கள் வரையும். அதே சங்கத்தின் இலங்கைத் தலைவராக இரு வருடங்கள் தொடர்ந்தும் பதவி வகித்துள்ளார்,

மன்னுர் மாவட்டத்தில் பிரதம சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய காலத்தில், திருக்கேதீசுவரம், மடுத் திருப்பதி போன்ற சமயத் தலங்களில் உற்சவநாட்களின் போது பொதுச் சுகாதார வேலைகளுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்து மக்களாலும் மேலதிகாரிகளாலும் பாராட்டம்பட்டமையை எவரும இலகுவில் மறந்துவிட முடியாது.

இளைப்பாறிய பின்பும், இவரது சேவையை நன்கறிந்த இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கத்தவர் இவரை யாழ்ப்பாண மாவட்ட குடும்பத் திட்ட உத்தியோகத்தராக நியமித்தனர். திரு. கந்தையா மூன்று வருடங்கள் திட்டமிட்ட குடும்பத்தின் அவசியத்தை கோண்டாவில். அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் மக்கள் அனுசரிக்கும் வகையில் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைளை மேற்கொண்டு மக்களது நன்மதிப்பைப் பெற்ருர்.

திரு: கந்தையாவின் மறைவு யாராலும் நிரப்ப முடியாத பேரிழப்பாகும். இன்று அவருடைய அந்திரியட்டிக் கிரியைகள் நடைபெறுகிளிறன.அவர் புகழ் என்றும் நிலைக்கவும், ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திப் போமாக. (கி)

—கா, வயித்தீஸ்வரன்.

## பயன் தரும் கருத்தரங்கு

(புங்குடுதீவு)

இலங்கை வங்கி தனது தேசிய அறக்கொடைத் திட்டம், தேசிய ஒய்வூதியத் திட்டம், வைப்புச்சான்றிதழ்த் திட்டம், நிலையான வைப்புகள் ஆகியன குறித்து அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்றினை நடத்தியது. இக் கருத்தரங்கில் இலங்கைவங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. கா. வே, முத்துக்குமாரசாமி மற்றும் முகாமையாளர்கள் திரு. இ. இரத்தினசோதி திரு. க. திருநாவுக்கரசு ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

அனலை தீவு மத்தி சன சமூக நிலையத்தினரின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில் 200க்கு மேற்பட்டோர் வங்கியின் தேசிய அறக்கொடை திட்டத்தில் சேர்ந்து கொண்டனர்.

இதே போன்ற ஒருகருத்தரங்கு ஒன்று நயினுதீவு மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றது. (அ)

## ஆலயபரிபாலனசபை

(வேலணை)

வேலணை கிழக்கு தவிடுதின்னிப்பள்ளையார் கோவிலின் புதிய பரிபாலனசபை அமைப்புக் கூட்டம் ஆலய மண்டபத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. சோ. மார்க்கண்டு. இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் ந. ஜெகநாதன், பொ. சிவசுந்தரம். தனுதிகாரி: திரு. ஏ. ரி. ஆனந்தரா. நிர்வாக உறுப்பினர்: திருவாளர்கள் செ. நாகராசா, வ. ஐயாத்துரை, செ. ஸ்கந்தராசா, க. பாலசுப்பிரமணியம். (க)

## இடமாற்றம்

(மண்டைதீவு]

வேலணை பெரும் தெருக்கள் திணைக்கள அலுவலகத்தில் கடந்த பத்து வருடங்களாக வேலைத்தள மேற்பார்வையாளராக கடமையாறறிய திரு. எஸ். கே. படிகலிங்கம் மிக அண்மையில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றவர். இவர் அடுத்த மாதத்திலிருந்து வெலிமடைக்கு இடமாற்றம் பெற்று செல்லவிருக்கின்ருர்.

## ராஜகோபுரமும் வசந்தமண்டபமும்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்திற்கு நான்கு லட்ச ரூபா செலவில் புதிய இராஜகோபுரமும் மூன்று லட்ச ரூபா செலவில் வசந்தமண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்தில் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 31ம் திகதியன்று நடைபெறவுள்ளது. (அ)


7 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
பட்டாக்கத்தி பைரவன்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

றீகல் (யாழ்.நகர்) தினசரி 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
Damnation Alley

ராஜா (யாழ். நகர்) சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
ரஜனிகாந்த், படாபட், தேங்காய் சீனிவாசன்
6 இருந்து 60 வரை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
129வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
யாழ. நகர்
கமலஹாசன் - ஸ்ரீதேவி
(இருவேடம்) நடித்த
கல்யாண ராமன்
(புதிய பிரதி)

இன்னும் சிலதினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ராணி (யாழ்.நகர்) கடைசி 3 தினங்கள்
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி
லட்சுமி
தங்கைக்காக
29 முதல் உல்லாசப்பறவைகள்

சீனு, யப்பான் நாடுகளிலிருந்து
பெருமளவு இறக்குமதி
★ றெக்சின் குளோத் வகைகள்
★ நில காப்பற் வகைகள்
★ உள்ளூர் றெக்சின், பொலித்தீன்
★ லொறி பொடி அமைக்கும் சாதனங்கள்
எச். இஸ்மாயல்ஜி அன் கோ
71 — 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# வரி விளம்பரம்

## தேவை

20 வயதிற்குட்பட்ட உதவிப் பீயோன் வேலைக்கு ஆள் தேவை. காரியாலய நேரத்தில் நேரில் வரவும். Tax and Accounting Services, 37, பிரப்பன் குளம் வீதி, யாழ்ப்பாணம். 2059

## வகுப்பு

எயர் கொண்டிசனிங் அன் ரெப்பிறிஜிறேசன் செய்முறைப் பயிற்சிகளுடன் 1-2 82இல் வகுப்புகள் ஆரம்பம். Auto Cool Engineers (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2026)

## பயிற்சி

விசேட ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி, வெல்டிங் பயிற்சி 03—02—82 ஆரம்பமாகிறது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2014)

## விற்பனைக்கு

கம்பியூட்டர் புறொகிராமிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எங்கள் நிறுவனத்திலுள்ள கம்பியூட்டர் இயந்திரத்தில் செய்கை முறைப் பயிற்சிகளும் (செய்முறை பயிற்சி) அளிக்கப்படுகின்றன. இருபாலாரும் கற்கலாம். புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 23-01-82. விபரங்களுக்கு: Auto Cool Engineers (சாந்தி தியேட்டருக்கு முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2028)

E Y 1584 இலக்க — A 40 கார் லெவின் மொடல் நல்ல நிலையிலுண்டு. நேரில் வரவும். சுஜாதா ஜுவலர்ஸ், 214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2062

## கல்வி

பிரஞ்சு மொழி, ஜேர்மன் மொழி வகுப்புக்கள் இலகுவான முறையில் போதனை, குறுகிய காலப் பயிற்சி—அனைவரும் சேரலாம். ஆரம்பம்: 29—01—82 நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2046

# திருமண அழைப்பு

மணமகன்:

**செல்வன் வெ. நவினச்சந்திரன் (ரஞ்சன்)**

மணமகள்:

**செல்வி ச. சிவராணி (ராணி)**

காலம்:

**துர்மதி தை 14 (27-01-82) புதன்**

நேரம்:

**காலை 7-45 — 9-25 மணி மங்கல நண்பூணல்**

இடம்:

**திருநெல்வேலி சிவன்கோவில்**

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சி சதாசிவம்பிள்ளை தம்பதிகள்**
71, ''சிவபதி'',
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

**சி. வெற்றிவேலு தம்பதிகள்**
''திருப்பதி'',
உரும்பராய் வடக்கு.

(2042)

சகல மின்சாரப் பாவனையாளர்களுக்கான

# அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

1—10—81 தொடக்கம் சகல மின்சாரக் கட்டணங்களும் பின்வரும் விகிதப்படி செலுத்தப்படல் வேண்டும்,

### வீட்டுத்தேவை

முதல் தொகுதி 50 அலகுகளுக்கு,
அலகு — /50 சதப்படி
2—வது தொகுதி 300 அலகுகளுக்கு,
அலகு — /60 சதப்படி
350 அலகுகளுக்கு மேற்பட்ட
அலகு — /75 சதப்படி
மு. கு. 200 அலகுகளுக்கு மேற்பட்ட அலகுகளுக்கு எரிபொருள் சீராக்கல் கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்.

### சமய சம்பந்தப்பட்ட தேவை

அலகு ஒன்றுக்கு — /40 சதப்படி
மு. கு. ; 200 அலகுகளுக்கு மேற்பட்ட அலகுகளுக்கு எரிபொருள் சீராக்கல் கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்.

### வர்த்தக மற்றும் கைத்தொழில் தேவை

அலகு ஒன்றிற்கு — /80 சதப்படியும் எரிபொருள் சீராக்கல் கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்.

தயவு செய்து சகல மின்பாவனையாளர்களும் இவ் விகிதமாற்றத்தைக் கவனத்திற்கொள்ளும்படிவேண்டப்படுகின்றனர். காலக்கிரமத்தில் மின்கட்டண விபரங்கள் சம்பந்தமான விரிவான கைப்பிரதிகள் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும்,

சி. வி. கே. சிவஞானம்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளர்,

யாழ், மாநகராட்சி மன்றம்,
22—1—82. (2073)

## விற்பனைக்கு

சாவகச்சேரிச் சந்தையிலிருந்து 300 யார் தூரத்திற்குள் $2\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திரு. வை. விஜயபாஸ்கரன், நகரசபை அலுவலகம், சாவகச்சேரி. தொலைபேசி: 276 — சாவகச்சேரி. [2075]

பலாலி விமானநிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் தம்பாலை வீதியில் 100 பரப்பு காணி கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு, இரண்டு துண்டுகளாக விற்கப்படும், செம்மண் தறை, சுற்றுமதில், ஆழமான இரு கிணறுகள், பயன்தரக் கூடிய மரங்கள் உண்டு, இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு காற்ருடி இயந்திரங்களும் 5000 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கிகளும் உண்டு, மேலதிக விபரங்களுக்கு: 399, பிரதான வீதி, சுண்டிகுளி. (2076)

பாதிரியார் கோயில் லேன் பரமசிவம் முன் ஒழுங்கையில் அமைந்திருக்கும் $2\frac{1}{2}$ பரப்பு காணி விற்பனைக்குண்டு, தொடர்பு: S. பஞ்சலிங்க பாதிரியார்கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், [2082]

3 அல்லது $1\frac{1}{2}$ பரப்பு காணி பிறவுண் வீதியில் இந்து மகளிர் கல்லூரிக்கு கிட்ட உடன் விற்பனைக்குண்டு. 78, அரசடி வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். [2077]

National NV 2000 EN மொடல் வீடியோ டெக் பக்கிங் உடையாமல் உடன் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடும் நேரம் பகல் 12 மணிக்கு முன்னர். என். கே. கமலலிங்கம், 92, பிரசாந்தி, பழம்றோட், கந்தர்மடம். [2081]

## தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சைவ சிற்றுண்டிச்சாலைக்கு சகல ஊழியர்களும் தேவை. நேரில் சமுகமளிக்கவும். கலைஞானி, 11/7, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2080

## வாடகைக்கு

142, ஆஸ்பத்திரி வீதிக் கட்டிடத்தில் மேல் மாடிமட்டும் (Audit Firm) போன்றவைக்கு கொடுபடும். நம். 3, ஸ்ரான்லி வீதிக் கடையோடு கட்டப்பட்ட பின் அறைகளும், வாடகைக்குண்டு. விபரம்;— 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2085

நவீன வசதியுடன் சிறிய தனி வளவில் சிறிய வீடு ஒரு படுக்கை அறை, இருக்கை அறை, சமையலறை. இளம் தம்பதிகட்கு ஒரு பிள்ளையுடன் மட்டும் (கார் கராஜ் உண்டு) 19, கடைச்சாமி வீதி, நீராவியடி. 208

## WANTED

Wanted an experienced soap Sales representative for a soap Industry in Jaffna. Apply with experience Ec Salary negotiable, C/o Advt No 2078, Eelanadu [2078]

## போலந்து நிலைமை

வார்சோ, ஜன. 24

போலந்தில் தடுப்புக் காவலிலுள்ள தொழிற்சங்க தலைவர்களின் பிள்ளைகளை அந்நாட்டு அரசாங்கம் விசேட நிலையங்களில் சேர்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இப்பிள்ளைகள் தாய் மார்களிடமிருந்து பறிக்கப்பட்டு, விசேட நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (வெ)

நா ஏகாம்பரம்
சட்டத்தரணி
வட்டுக்கோட்டை

முதலிலே ஆக்கப்படும் முற்முன கட்டளை பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வட்டுக்கோட்டை மேற்கு வயித்திலிங்கம் செல்லத்துரை கைம்பெண் செல்லம்மாவின் மரண சாதன விடயத்தில்

—மரணமெய்தியவர்

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல: 3626

யாழ்ப்பாணம் சிவன்—பண்ணை வீதியில் 35ம் இலக்கஇல்லத்தைசேர்ந்த வைத்திலிங்கம் கணேச சிவானந்தன்

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு ஆவணி மாதம் 27ந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்முன கட்டளை பதியப் பட்டதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1981ம் ஆண்டு ஆவணி மாதம் 27ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
தா குலஞானம்
பதிவாளர்

தயாரித்தவர்
நா ஏகாம்பரம்
மனுதாரின் சட்டத்தரணி
2043

பச்சிலைப்பள்ளி
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
பளை

# கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்கு வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. கேள்வி விண்ணப்பப்படிவத்தை பா 100/— மீளப்பெறும் வைப்பாக செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை, வெற்றுச் சாக்குகளை பார்வையிட விரும்பின் சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம், விண்ணப்பங்கள் யாவும் 3—2—1982க்கு முன் சீல்இடப்பட்ட பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும், தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்,

இங்ஙனம்
**பொது முகாமையாளர்,**
பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம்,
பளை.

25—1—82. [2053]

# விறகு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

ஆனைக்கோட்டை மரக்கூட்டுத்தாபனக் கிளை விற்பனை நிலையத்தில் விறகுகளுக்கும், மரங்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக [illegible]கார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையத்திற்கு அவசியமான விறகு மரங்களை அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மானிப்பாய் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் திரு ஆ. [illegible] அலோசியஸ் மரக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

# ஜப்பானில் பிரதமர் 'பிரேமா'

டோக்கியோ ஜன. 24

அமெரிக்காவில் வைத்திய சிகிச்சையை முடித்துக் கொண்ட பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா தாயகம் திரும்பும் வழியில்ஜப்பான் போய்சசேர்ந்துள்ளார்.

ஜப்பானிய பிரதம மந்திரி திரு. சுசூக்கி அங்கு இவரை வரவேற்ருர்.

திரு. பிரேமதாசா ஜப்பானில் அரசாங்க விருந்தினராக இரண்டு நாட்கள் தங்கியிருப்பார்

## ''ஈரானில் பயங்கரவாதிகள் ஆட்சி''

லண்டன், ஜன. 24

''ஈரானில் பயங்கரவாதிகளே ஆட்சி செய்கிருர்கள். ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் ஆட்சியை கவிழ்க்க நான் தயாராகவுள்ளேன் இவரின் ஆட்சி அதிககாலம் ஈரானில் நீடிக்கப்போவதில்லை''

மேற்கண்டவாறு ஈரானின் முன்ருள் பிரதமமந்திரி ஜனுப் பக்தியார் குவைத் பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (வெ)

## ''சமுதாயத்திற்கு அவசியமான நற்பணிகள்''

(யாழ்ப்பாணம்)

''ஸ்தாபனங்களால் ஆற்ற முடியாத சேவையத்தனிமனிர் ஒருவர் ஆற்றிவருவது மிகவும் பாராட்டற்குரியது'' என்று நேற்று இலங்கை தேசிய கயரோகத் தடுப்பு சபையின் யாழ் கிளை ஆதரவில் கயரோகம் தொடர்பான பிரசுரமொன்றை மில்க்வைற் தொழிலகம் கூட்ட மண்டபத்தில் தொழிலக அதிபர் திரு. மு. கனகராசாவிடம் பெற்று வெளியிட்டு வைத்து உரையாற்றிய டாக்டர் ஜே, ஆர். வில்சன் குறிப்பிட்டார்,

கயரோக தடுப்புப் பிரசார உத்தியோகத்தர் திரு, கு, நடராசா தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் இந்த ஸ்தாபனம் ஆற்றுகின்ற நற்பணிகள் சமுதாயத்திற்கு அத்தியாவசியமானது என்ருர்,

மற்றும் இவ் வைபவத்தில் சங், சகோதரி ஈபேக்கர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (உ)

## சுன்ருகம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மகா விவேகிகள்.

இப்பாடசாலையின் முகாமையாளர் (மனேஜர்) நாவலரின் தமையஞரின் மகன் ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்கள். இங்கு நடாத்தப்பட்ட காவிய வகுப்பிற்குரிய மாணவர்கள் அனைவருமே வேதனமின்றியே பயின்றனர். உண்டியும் உறையுளும்கூட இலவசமாக வழங்கப்பட்டன. ஆனல் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் திறன்மிக்கவர்களாக இருக்க வேண்டும்.

காலஞ்சென்ற புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை ஆதிய காளமேகங்களும் சித்தாந்த சாகரங்களும் இக்காவிய வகுப்பில் பயின்றவர்களேயாம்.

இவரையும் மனேஜர் ஸ்ரீமத் த. கை அவர்களையும் இன்றும் தன்னிரு கண்ணிரு மணிகளாகவே பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப் பிள்ளை போற்றிவருகின்ருர் என்ருல்—? புலவர் அவர்களின் மகிமை இருந்தவாறு.

# "நாம் இயங்க நம்மை நாமே ஆளவேண்டும்!"

## 'நடா' கருத்து

(கோண்டாவில்)

''இன்றைய அரசை நம்பி தமிழ் மக்கள் இருப்பார்களா யின் அது நம்பிக்கெட்டதை யாகத்தான் முடியும். இதனை நான் கடந்த ஆறுமாத கால அனுபவத்தில் கண்டேன்''

கொக்குவில் புதிய அரசினர் மருந்தகத் திறப்புவிழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா கலந்து கொண்டு உரை யாற்றுகையில் மேற்கண்ட வாறு கூறினார். திரு. பொ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சு. நடராசா மேலும் கூறியதாவது;

''தமிழனைப்பொறுத்தவரை யில் அவன் அதிகம் பேசியே கெட்டவன். நாம் ஒருபூரணத் துவமாக இயங்க வேண்டுமா னால் எம்மை நாமே ஆளவேண் டும். இதன் காரணமாகத் தான் முதற்படியாக எமது அரசியல் தலைவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுர் கள்.

''எமதுபகுதி மேலும் முன் னேற்றம் அடைய எமதுபகுதி மக்களின் உழைப்பு வேண்டும். நாம் எச்சந்தர்ப்பத்திலும் அர சின் உதவி கிடைக்கும் என்ற சிந்தனையில் இருக்கக்கூடாது. நாம் ஆளும் கட்சியினரைச் சந்தித்து எமது பகுதி மக்க ளுக்கு வேண்டியவசதிகள் பற் றிக்கேட்டால் ஜனுதிபதி தமது பகுதி மக்களிலும்பார்க்க நாம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளீர்கள்என்றுகுறிப் பிடுவார் தமது பகுதிமக்கள் இவைபற்றிக் கேட்பதில்லையே என்றும் அவர் கூறுவார்.

''எந்த ஒருநாட்டின் அபி விருத்தியும் அந்த நாட்டின் மக்களிலேயே தங்கியுள்ளது. அரசை நம்பினுல் மேலும் ஏமாற்றமே அடைவோம். எமது பொருளாதாரம் பின் தங்கிய நிலையிலேயே காணப் படுகின்றது. ஆனுலும்கூட நாம் தனியாரின் முயற்சியினு லேயே முன்னேற்றம் அடைந் துள்ளோம். நான் பொது வான ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். கிராமப் புறங்களில் இருக்கும் செல்வந் தர்கள் தமது பணத்தின் ஒரு குறிப்பிட்ட தொகையை அப் பகுதியின் முன்னேற்றத்திற்கு செலவு செய்ய வேண்டும். தேவைக்கு அளவு அல்லது கட்டுப்பாடு இல்லாத போதிலும்கூட ஒருபகுதியை கிராமமட்டத்தின் விடிவுக்கு செலவு செய்யவேண்டும்.

யாழ்ப்பாண சுகாதார திணைக்கள அத்தியட் சகர் திரு கே. மாணிக்கம் பேசுகையில் ''இன்று யாழ்ப் பாணம் பெரியாஸ்பத்திரியை மேலும் விஸ்தரிக்க யாழ்ப் பாண மாவட்ட அபிவிருத்தி சபை முயற்சிகளை மேற் கொண்டு அதுபற்றி சுகாதார அமைச்சுடனும் தொடர்பு கொண்டுள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளர் என்னி டம் விபரங்களைக் கோரியுள் ளார். யாழ்ப்பாணஆஸ்பத்திரி பெருப்பிக்கப்பட்டதும் எமது நோய்கள் தீர்ந்துவிடும் என்று யாரும் கருதக்கூடாது. இன்று மருந்து வகைகளை தட்டுப் பாடாக இருக்கின்றன'' என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சு. வித்தியானந்தன், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. கி. நாகராசா, யாழ். மாவட்ட நீதிபதி திரு. கி:பாலகிட்ணர், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. சு. புஞ்சலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (க)

## இப்படியும் நடக்கிறது

காங்கேசன்துறைக்கும் கொழும்புக்குமிடையே நடைபெறும் கடுகதி ரயில், மற்றும் தபால் (மெயில்) ரயில் சேவைகளுக்குள்ள வித்தியாசம் என்ன?

கடுகதி ரயில் பகலில் புறப்படுகிறது. தபால் ரயில் இரவில் புறப்படுகிறது. இது வித்தியாசம்.

இரண்டுக்குமுள்ள ஒற்றுமை: அநேகமாக எல்லா ரயில் நிலையங்களிலும் இரண்டு ரயில்களும் தரித்துச் செல்கின்றன.

ஊடுருவி

## வவுனியா சித்தஆயுர்வேத மாநாடு

(வவுனியா)

வவுனியா மாவட்ட சித்த ஆயுர்வேத வருடாந்த மாகா நாடு நேற்று சிறப்பாக நடை பெற்றது.

இம் மாகாநாட்டில், வன்னி நாட்டின் பழம் பெரும் ஆயுர் வேத வைத்தியர்கள் பலரும் கலந்துகொண்டு சில முக்கிய தீர்மானங்கள் மேற்கொண்ட னர்.

வவுனியா இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் குரிய இடத்தை உடனடியா கத் தெரிவு செய்து நடவ டிக்கை மேற்கொள்ளுமாறு வவுனியா அரசாங்க அதிபரை யும், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவரையும் கோருவ தென்றும்; வவுனியா பம்பை மடு மூலிகைச் செய்கையை மாவட்ட அபிவிருத்திசபை பொறுப்பேற்க வேண்டுமென் றும் தீர்மானிக்கப்பட்டது.

சித்த ஆயுர்வேத சபையின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய் யப்பட்டனர்.

பிரதம ஆலோசகர்: எஸ். எம். கே. சுபசிங்க, தலைவர்; அ. பூலோகசிங்கம், உப தலை வர்: எம். கந்தையா, செயலா ளர்; க. பாலசிங்கம். இவர்கள் தவிர ஒன்பது பேர் கொண்ட கமிட்டியும் தெரிவு செய்யப் பட்டது.

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு மோசடி வழக்கு :

# 21பேரிடம் பணம்பெற்றதை எதிரி ஒப்புக்கொண்டார்!

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வேலைபெற் றுத் தருவதாக 21 பேரிடம் 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபா வாங்கி மோசடிசெய்ததாகக் கூறப்படும் ஒருவரைப் பொலி சார் கைதுசெய்து வழக்குத் தாக்கல்செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த அருணுசலம் ஜெயரசசா என் பவர் மீது யாழ் நீதிமன்றத் தில் நீதவான் ரி. ஜோகநா தன் முன்னிலையில் இவ்வழக் குத் தொடரப்பட்டுள்ளது,

வழக்கு விசாரணையின்போது தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட நபர் 21 பேரில் நீதிமன்றத்தில் சமூகமளித் திருந்த நால்வருடைய பணத் தையும் மார்ச் 18ந் திகதி கொடுப்பதாகத் தெரிவித்தார்

இதைத் தொடர்ந்து மற் றைய 18 பேரையும் மார்ச் 18ல்சமூகமளிக்குமாறு அழைப் பாணை விடுமாறு நீதவான் உத்தரவிட்டார்,

யாழ், பொலிஸ் விசேட புல ணய்வுப் பிரிவுச் சார்ஜன்ட் ஜி.எஸ்.பிள்ளை இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இதே நபர் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த என். இராச நாயகம் என்பவரிடமிருந்து வாங்கிய 6,500 ரூபாவை மோசடிசெய்த வழக்கில் குற் றத்தை ஒப்புக்கொண்டு, நீதி மன்றத்தில் வைத்து முற்பண மாக 1,000 ரூபாவைக் கொடுத்தார்.

வைமன்வீதிச் சம்பவம்:

## தங்கச்சங்கிலியுடன் ஒருவர் பொலிஸில் சரண்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைமன் வீதி யில் வைத்து, கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய பெண்ணிடமிருந்து சங்கிலி அறுத்த மூவரில் இரண்டா வது சந்தேகநபர் சங்கிலியின் மிகுதிப் பகுதியுடன் யாழ்ப் பாணம் பொலிசில் நேற்றுச் சரணடைந்துள்ளார்.

திருமதி தர்மதேவி ஸ்ரீசுப் பிரமணியம் என்பவர் வீரமாகாளி அம்மன்கோவி லுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது அவர் அணிந்திருந்த 3 பவுண் சங்கிலியை சைக்கிளில் வந்த மூவர் அறுத்துக்கொண்டு ஓடியபோது, பொதுமக்கள் துரத்திச் சென்று மூவரில் சந் தேகநபரான சந்திரசேனு என் பவரை மாத்திரம் பிடித்த துடன், அவரிடமிருந்து சங் கிலியின் ஒரு பகுதியையும் கைப்பற்றி யாழ். பொலிசில் ஒப்படைத்தது தெரிந்ததே.

நேற்று மற்றொரு சந்தேக நபரான ஆ. இந்திரகுமார் சங் கிலியின் மிகுதிப் பகுதியுடன் யாழ்.பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சரணடைந்தார்.

மூன்றுவது சந்தேக நபரை யாழ். பொலிசார்தேடிவருகின் றனர்.

## மரண அறிவித்தல்

### கனகசபை நவரத்தினராசா

கொழும்பு சட்ட மாஅதிபரின் திணைக்களத்தில் லிகிதராகக் கடமையாற்றிய கனகசபை நவரத்தின ராசா 23—01—82ல் காலமானுர். இவர் சுந்தரேஸ்வரி (பபா) யின் கணவரும், சாயீந்திரியின் அன்புத் தந்தையும், சாவகச்சேரி சிரேஷ்ட சட்டத்தரணி வே. கனகசபையினதும் திருமதி லீலாவதியினதும் அன்புப் புதல்வனும், இளைப்பாறிய தபால் அதிபர் நடராசாவின் அன்பு மருமகனும், பேசாலை மகா வித்தியாலய ஆசிரியை திருமதி சாந்தா வாமதேவா, யாழ்ப்பாணப் பாதுகாவல் அதிகாரி உத்தியோகஸ்தர் திருமதி வேதா சிவதாசன், நாவலப்பிட்டி அரசாங்க வைத்திய அதிகாரி திருமதி புனிதா வீமவேற்பிள்ளை, யாழ்ப்பாண வர்த்தக வங்கி லிகிதர் விவேகானந்த ராசா, சட்டக் கல்லூரி மாணவிகள் மீனு, சிவா, அற்புதம், பரமநாயகி ஆகியோரின் அன்புச் சகோதர ரும், திரு. வாமதேவன், திரு. சிவதாசன், திரு. வீமவேற்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரு மாவார்.

அன்னரது பூதஉடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (25—01—82) மாலை 4 மணியளவில் மானிப் பாய் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள அவரது சாயி இல்லத்தில் இருந்து பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: வே. கனகசபை

2087

## சிமெந்து கையாடல் வழக்கில் எதிரிகள் விடுதலை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் 5 பைக்கற் சிமெந்து கையாடல் செய்த தாதத் தொழிற்சாலை உத்தி யோகத்தர்கள் இருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதி கள் விடுதலை செய்யப்பட்ட னா. வேலை மேற்பார்வையா ளராக கடமையாற்றிய ரி.நவ ராஜா, களஞ்சியப் பொறுப் பாளராக கடமையாற்றிய எம. சிவகுமார் ஆகிய இருவர் மீதும் காங்கேசன்துறைப் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலை யில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் தொழிற் சாலை சுப்பிரீன்டன் டபிள்யூ. ரி. ராஜ்குமார் சாட்சியமளித் தார். இவரது சாட்சியத்தைத் தொடர்ந்து எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்று எதிரி கள் சார்பில் ஆஜரான சட்டத் தரணி ஆர். ஜே. செல்வரத் தினம் கோரினுர்.

இதனையடுத்து நீதிபதி எதிரி களை விடுதலை செய்து தீர்ப் பளித்தார். (அ)

## தமிழர் கலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேசுகையில் ''தமிழ் மக்கள் தங்களது கலை கலாசாரத்தை வளர்ப்பதற்கு தமது சொந் தப் பணத்தையே செலவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்'' என் ருர்.

யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன் பேசுகையில், ''தமிழ் மக்கள் மொழியை யும் கலையையும் தமது இரு கண்களெனப்போற்றி வளர் த்து வருபவர்கள்; அதிலும் நடனக்கலை தமிழ் மக்கள் வாழ்வுடன் ஒன்றுபடக் கலந் துள்ளது'' என்ருர்.

''பண்டைய மன்னர்களால் கௌரவிக்கப்பட்டு வளர்க்கப் பட்டுவந்த நமது நாட்டியக் கலையை இன்று நாம் சரிவர நிறைவேற்றமுடியாத துர்ப் பாக்கிய நிலையிலிருக்கின் ருேம்'' என்றும் முதல்வர் கவலைதெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை உறுப்பி னர் திரு.எஸ். தியாகராசாவும் உரையாற்றினுர். திரு. பர மேஸ்வரன் நன்றி தெரிவித் தார்.

## தாய்மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ருர்,

யாழ். பல்கலைக்கழக மாண வர் அவைத் தலைவர் திரு. கே. என். இராஜநாயகம், இ. த. ஆ. சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம், திரு. கோவை. மகேசன், திரு, எஸ். லோகநாதன் ஆகியோரும் கல்வி வெள்ளை அறிக்கையைக் கண்டித்துப் பேசினர்.

'தமிழ் ஈழ மக்களுக்கு கல்வி வெள்ளை அறிக்கையால இல வசக் கல்விக்கு குழிபறிப்பு', 'கொத்தணிமுறையின் தாக் கம்', 'பாடசாலை நிர்வாகத் தில் சிக்கல்', 'சமூகவியலில் அதன் தாக்கம்', 'பாடத்திட் டம் பாதிப்பு' போன்ற வாச கங்களைக்கொண்ட பிரசுரம் ஒன்றும் ஈழ மாணவர் பொது மன்றத்தால் வெளியிடப்பட் டுள்ளது'

## மட்டக்களப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இன்றைய கூட் டமும் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் தலைவரால் ஒத்திவைக்கப்படலாம் எனத் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.